விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram WESTERN UNION WU Ria
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...

SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 தை 05 திங்கட்கிழமை (18.01.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 030

## முரசுமோட்டையில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி முரசுமோட்டைப் பகுதியில் இடம் பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி, பரந்தன் முல்லைத் தீவு 35 வீதி முரசுமோட்டை 19

## மண்டைதீவு, மண்கும்பான் பகுதிகளில் காணி சுவீகரிப்புக்கு எதிராக அனைவரும் அணிதிரளுங்கள்

### கஜதீபன் அழைப்பு



(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு மற்றும் மண் கும்பான் பகுதிகளில் கடற்படையினரின் 19

# மீண்டும் ஒருமுறை உரத்து ஒலிப்போம்;

# தாயகம் தேசியம் சுயநிர்ணயம்

# இவையே எமது மூச்சு!

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

மரபு வழித் தாயகம், தமிழ்த் தேசியம் மற்றும் சுயநிர்ணய உரிமை இவையே எமது மூச்சு என மீண்டும் ஒருமுறை உரத்து ஒலிப்போம் என யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

நேற்று இடம்பெற்ற பொங்குதமிழ் பிரகடனத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் மேற்படி விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது. (03ஆம் பக்கம் பார்க்க)



யாழுக்கு முதலில் கொரோனாவை பரப்பியதாகக் கருதப்படும்

## போதகர் சற்குணம் சுவிஸில் உயிரிழப்பு

(சூரிச்)

சுவிஸ் நாட்டில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு 19

## 3 பிள்ளைகளின் தாய் வெட்டிப் படுகொலை

### பூநகரியில் கொடூரம்

(பூநகரி)

பூநகரிப் பகுதியில் நேற்று மாலை கொலை செய்யப் பட்ட நிலையில் சடலமாக 19

உயர்தரப் பெறுபேறுகள்

## ஏப்ரலில் வெளியாகும்

### கல்வியமைச்சர்

(கொழும்பு)

2020ஆம் 19

## வடக்கில் 8 0 0 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்று 420 பேருக்கு நடத் 19

தொல்பொருள் திணைக்களத்தினர்

## முல்லை குருந்தூர்மலையை ஆக்கிரமிக்க தீவிர முயற்சி

### தமிழ் எம்.பிக்கள் விஜயம்

19ஆம் பக்கம் பார்க்க

## வைத்தியர் சடலமாக மீட்பு



19

கொரோனாவால் நேற்றும்

## 8 பேர் பலி

749 பேருக்குத் தொற்று

19ஆம் பக்கம் பார்க்க

ஐ.நாவின் புதிய தீர்மானத்துக்கு அனுசரணை வழங்க

## இலங்கை மறுப்பு

03ஆம் பக்கம் பார்க்க

## துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் மரணம்

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியாவில் இடியன் துப்பாக்கியால் சுடப்பட்டு காயமடைந்திருந்த நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் மரணமடைந் 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



## ஜெயலக்சுமி பொன்னம்பலம்

யாழ். கொக்குவில் கிழக்கு, உடையார் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் அம்பலவாணர் வீதி, அத்தியடி, ஜெர்மனி Geilenkirchen ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட ஜெயலக்சுமி பொன்னம்பலம் கடந்த 15.01.2021 வெள்ளிக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை - யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் மார்க்கண்டு பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் அன்னலக்சுமி, காலஞ்சென்ற வீரலக்சுமி, தவலக்சுமி, விஜயலக்சுமி, காலஞ்சென்ற மகாலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஸ்ரீகௌரி (கௌரி), இராமநாதன் (பொன் ராமா), லதா, ரகுநாதன் (ரகு), ஜெயநாதன் (ரமேஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கைலங்கிரிநாதன், சாந்தலிங்கம், வசுமதிதேவி, சர்மிலா, மைதிலி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான தியாகேசர் கந்தசாமி, குமாரசாமி, மகேந்திரன் மற்றும் முத்துராசா, காலஞ்சென்ற கந்தசாமி, சிற்றம்பலம், காலஞ்சென்ற புவனேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் கோபிநாத், பிரதீபன், பிரசன்னாத், ராம்ஜித், ராம்ஜிகா, கஸ்த்தூரி, ரமீசன், சாருகன், ரஷ்சிகா, ரஷ்வின், ரிஷானா, ரிஷான், ஜனனி, தர்மிதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜெயந்தின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.01.2021) திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-1191)

தகவல் :

மா. சிற்றம்பலம் (மைத்துனர்)
கேணியடி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

சி. ஸ்ரீஜீவா (பெறாமகன்)
ஸ்ரீ முருகன் களஞ்சியம், வட்டுக்கோட்டை.
உறுப்பினர் வலி. மேற்கு பிரதேச சபை

# வவுனியாவில் நேற்றும் 28 பேருக்கு தொற்று

(வவுனியா)

வவுனியாவில் நேற்று மட்டும் 28 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளர் ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பது அண்மையில் உறுதி செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் அவர்களுடன் தொடர்புகளை பேணிய வைத்தியசாலை ஊழியர்களிற்கு நேற்று முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையிலும் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், கந்தசாமி கோவில் வீதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த எண்ணிக்கையுடன் வவுனியாவில் நேற்றைய தினம் 28 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் 205 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஞா-250,299)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

பாராட்டி வாழ்த்துகின்றோம்



விஸ்வலிங்கம் மணிவண்ணன்
(யாழ். மாநகர மேயர்)

வெற்றி எனும் வேட்கை
உங்களுக்குள் இருக்கும்வரை
தோல்வி எனும் தடைகள்
கண்முன்னே காணப்படாது.


(C-1189)

உங்கள் சேவை மென்மேலும்
சிறக்க வாழ்த்தும்...

Best Wishes

உரிமையாளர் : பாக்கியநாதன் சிவநாதன்
விநாயகர் மர அரிவு ஆலையும்
மர வியாபாரமும்
தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.

# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை சிவபாதம்

**தோற்றம் : 29.03.1933 மறைவு : 17.01.2021**

மணல்தரை வீதி, கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிவபாதம் நேற்று (17.01.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசையா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ஞானம்மாவின் அன்புக் கணவரும் சிவகரன் (ஜேர்மனி), சிவாஸ்கரன் (டென்மார்க்), அமுதரசி (நோர்வே), சிவராமன் (டென்மார்க்), சிவரூபன் (பின்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவரஞ்சனி, சிவரூபி, சுரேஸ், சுதா, சுதாமதி ஆகியோரின் அன்பு மாமனாரும் வினுசியா, லக்சியா, சஞ்சய், அதிசயன், யாதவி, அன்சலினா, சாருஜன், விகான் ஆகியோரின் அன்புப் பேரனும் தங்கச்சியம்மா, தம்பையா, சிவலிங்கம், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற அருளம்பலம், பரிமளாதேவி, மகேஸ்வரி, பூமலர், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், அன்னலட்சுமி, தவராசலிங்கம் மற்றும் பாலசந்திரனின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.01.2021) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(5312)

021 221 5506

தகவல்:
குடும்பத்தினர்

# சுயநிர்ணய உரிமை, மரபுவழித்தாயகம், தமிழ்த்தேசியம் இவையே எமது மூச்சு

## பொங்குதமிழ் பிரகடனத்தின் 20ஆம் ஆண்டு நிறைவு






(யாழ்ப்பாணம்)

மீண்டும் ஒருமுறை சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம் மற்றும் தமிழ்த் தேசியம் இவையே எமது மூச்சு என உரத்து ஒலிப்போம் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் மக்கள் பேரெழுச்சியாக திரண்ட பொங்கு தமிழ்ப் பிரகடனத்தின் 20 ஆம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இதன்போது மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித் துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள பொங்குதமிழ் நினைவுத் தூபியில், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் தலைமையில் இந்த நினைவு நிகழ்வு இடம் பெற்றது. இரண்டு நிமிட மௌன அஞ்சலி மற்றும் மலரஞ்சலியை தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் தயாரிக்கப்பட்ட பொங்குதமிழ் நினைவு நாள் அறிக்கையும் இதன்போது வாசிக்கப்பட்டது.

தமிழ் மக்களின் அபிலாசைகளான சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம் மற்றும் தமிழ்த் தேசியம் என் பன அங்கீகரிக்கப்பட வேண்டும் என கோரிக்கைகளை வலியுறுத்தி 2001 ஆண்டு முதலாம் மாதம் 17 ஆம் திகதி யாழ் பல்கலைக்கழகத்தில் மக்கள் பேரெழுச்சியாக திரண்ட நிகழ்வே பொங்கு தமிழ்.

இதனை நினைவுபடுத்தும் முகமாக அப்போதைய யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நினைவுத் தூபியும் திறந்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய நினைவு நாளில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில்,

பொங்குதமிழ் நினைவு நாள் - 2021 முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்து அழிக்கப்பட்டு தமிழ் மக்கள் தங்களது நினைவு உரிமையும் மறுக்கப்பட்ட ஒரு காலப் பின்னணியில் நாங்கள் பொங்குதமிழ் பிரகடனத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவை நினைவு கூருகின்றோம்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்த இந்த பொங்குதமிழ் உலகின் பல நாடுகளிலும் அங்கங்கு வாழும் தமிழ் மக்களால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு உலகம் முழுவதற்கும் தமிழ் மக்களது அடிப்படை அபிலாசைகளை எடுத்துரைத்து வருகின்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகத்தின் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை இந்த பொங்குதமிழ் நிகழ்வும், இங்கு நிறுவப்பட்டிருக்கும் பொங்குதமிழ் பிரகடன கல்வெட்டும் பறைசாற்றி நிற்கின்றன. காலாதிகாலமாக யாழ்ப்பாண பல்கலைக்கழகம் எடுத்துவந்த தமிழ்த்தேசிய நிலைப்பாடு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள இக்கால கட்டத்தில் நமது பொங்குதமிழ் பிரகடன நினைவுகூரல் முக்கியத்துவம் பெறுகின்றது.

ஆகவே மீண்டும் ஒருமுறை இந்த வருடமும் சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் இவையே எமது மூச்சு என மீண்டும் உரத்து ஒலிப்போம் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5-33)

## ஐ.நாவின் புதிய தீர்மானத்திற்கு அனுசரணை வழங்க இலங்கை மறுப்பு

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் கொண்டுவரப்படவுள்ள புதிய தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளை இலங்கை அரசு நிராகரித்துள்ளது.**

இதனால், இலங்கை குறித்த தீர்மானத்திற்கு பிரதான அனுசரணை வழங்கிய ஐந்து நாடுகளான கனடா, ஜேர்மனி, வட மசெடோனியா, மொன்டினீக்ரோ, பிரிட்டன் ஆகிய நாடுகள் புதிய தீர்மானத்தை கொண்டுவரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புதிய தீர்மானத்தின் உள்ளடக்கங்கள் சமரசப் போக்கை வெளிப்படுத்துபவையாக அமையலாம் என சிவில் சமூக பிரதிநிதிகள் கூறியுள்ளனர்.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்த வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயனாத் கொலம்பகே, "ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையில், ஒருமித்த தீர்மானமொன்றை ஏற்றுக்கொள்வது கூட இலங்கைக்கு அரசியல் ரீதியில் சவாலான விடயமாக காணப்படலாம்.

மேலும், அவ்வாறான தீர்மானமொன்றை இலங்கை ஏற்றுக்கொண்டால் அது இலங்கை, ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானத்தை எதிர்க்கவில்லை என்ற கருத்தை உருவாக்கும்.


ஆகவே, இலங்கை தீர்மானமொன்றிற்கு இணை அனுசரணை வழங்குவது குறித்த கேள்விக்கே இடமில்லை. அத்தகைய தீர்மானமே அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தது. அது அரசமைப்பிற்கும் இறைமைக்கும் மக்களிற்கும் எதிராக காணப்பட்டது.

அத்துடன் கருத்தொருமைப்பாட்டுடனான தீர்மானம் என்பது கூட சாத்தியமா இல்லையா என்பதை என்னால் தெரிவிக்க முடியவில்லை. ஆனால் அரசியல் ரீதியில் இது ஒரு பெரும் சவாலாக காணப்படும்.

மனித உரிமை பேரவையின் தீர்மானத்திலிருந்து வெளியேறியது குறித்த முடிவில் இலங்கை உறுதியாகவுள்ளது.

கடந்த 2019 ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் பாதுகாப்பு செயலாளருக்கு, முன்னைய இணை அனுசரணை வழங்கப்பட்ட ஆணை குறித்து மறுபரிசீலனை செய்வதற்காக மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## இம்ரான் கான் இலங்கை விஜயம்



(கொழும்பு)

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு அடுத்த வாரமளவில் இலங்கை வரவுள்ளார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை வரவுள்ள அவர் 5 நாட்கள் நாட்டில் தங்கியிருந்து பல முக்கியஸ்தர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-4)

# ராஜஸ்தான் கப்டன் பதவியிலிருந்து ஸ்மித் நீக்கம்? புதிய கப்டன் யார்?


ஐ.பி.எல்.தொடரில் ராஜஸ்தான் அணியின் கப்டன் பதவியில் இருந்து ஸ்மித் நீக்கப்படுவதாகவும் அவருக்கு பதிலாக இளம் வீரரை நியமிக்க முடிவு செய்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் உள்ளூர் தொடரான ஐ.பி.எல்.தொடர் நடைபெற்று வருகிறது. அந்தவகையில் இந்தாண்டிற்கான ஐ.பி.எல். தொடர் வரும் ஏப்ரல், மே மாதங்களில் நடைபெறவுள்ளது.

இதற்காக தங்கள் அணியில் தக்க வைத்து கொள்ளும் வீரர்கள், வெளியேற்றும் வீரர்களின் பட்டியலை அணியினருக்கு அறிவிக்கும் படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரும் பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி ஏலம் நடைபெறவுள்ளதாக கூறப்படுவதால், அனைத்து அணிகளும் தங்கள் அணியில் யாரை வைத்துக்கொள்வது யாரை நீக்கிவிடுவது என்று பட்டியலை தயாரித்து கொண்டிருக்கின்றன.

குறிப்பாக ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் கப்டனாக இருக்கும் ஸ்டீவன் ஸ்மித் அந்த அணியில் இருந்து நீக்கப்பட இருப்பதாகவும் கூறப்படுகிறது.




ஏனெனில் அவரது தலைமையில் அந்த அணி பெரிதாக ஏதும் சாதிக்கவில்லை. ராஜஸ்தான் அணியை 2008 ஆம் ஆண்டில் முதன்முதலாக ஐ.பி.எல்.கிண்ணத்தை வென்றது. அதன் பின் எந்த முறையும் கிண்ணத்தை வெல்லவில்லை.

2018 ஆம் ஆண்டு ராஜஸ்தான் அணி ஸ்டீவன் ஸ்மித்தை 12.5 கோடி ரூபாய்க்கு எடுத்தது. இருந்தாலும் அவரால் அந்த அணியை இருமுறை பிளே ஆப் சுற்றுக்கு அழைத்து செல்ல முடிந்ததே தவிர கிண்ணத்தைக் கைப்பற்றித்தர முடியவில்லை.

இதன் காரணமாக அவரை கப்டன் பதவியில் இருந்து வெளியேற்றிவிட்டு அவருக்குப் பதிலாக இந்திய அணியின் இளம் வீரரான சஞ்சு சாம்சன் கப்டனாக நியமிக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (4)

## இந்தியன் சுப்பர் லீக்

### மும்பை-ஐதராபாத் ஆட்டம் நடுநிலை



11 அணிகள் பங்கேற்றுள்ள 7 ஆவது இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து தொடர் கோவாவில் நடந்து வருகிறது.

இதில் நேற்று முன்தினம் அரங்கேறிய மும்பை சிட்டி- ஐதராபாத் எப்.சி.அணிகள் இடையிலான விறுவிறுப்பான ஆட்டம் கோல் இன்றி நடுநிலையுடன் முடிந்தது.11 ஆவது ஆட்டத்தில் ஆடிய மும்பை அணி 8 வெற்றி, 2 சமநிலை, ஒரு தோல்வி என்று 26 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது. (4)

## 14 ஆண்டுகளுக்கு பின் பாகிஸ்தான் சென்றது தென்னாபிரிக்கா

இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதற்காக தென்னாபிரிக்கா அணி பாகிஸ்தான் சென்றுள்ளது.

இலங்கை அணி பாகிஸ்தான் சென்று விளையாடும் போது பயங்கரவாதிகள் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் சென்ற பேருந்து மீது எதிர்பாராத வகையில் தாக்குதல் நடத்தினர். இதில் சில வீரர்கள் காயம் அடைந்தனர். அதில் இருந்து பெரும்பாலான அணிகள் பாகிஸ்தான் சென்று விளையாட மறுத்தது.

தற்போது வெளிநாட்டு அணிகள் பாகிஸ்தான் சென்று விளையாட சம்மதம் தெரிவித்துள்ளது. தென்னாபிரிக்க அணி இர ண்டு டெஸ்ட் மற்றும் மூன்று ஒரு நாள் போட்டிகளில் விளையாடுவதற்காக நேற்று முன்தினம் பாகிஸ்தான் சென்றடைந்துள்ளது.



இதற்கு முன் தென்னாபிரிக்க அணி கடந்த 2007 ஆம் ஆண்டு பாகிஸ்தான் சென்றிருந்தது. அதன்பின் தற்போது பாகிஸ்தான் சென்றுள்ளது.

இரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் கராச்சியில் எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையிலும் 2 ஆவது டெஸ்ட் ராவல்பிண்டியில் பெப்ரவரி 4 ஆம் திகதியில் இருந்து 8 ஆம் திகதி வரையிலும் நடைபெறவுள்ளது. இருபது-20 கிரிக்கெட் தொடர் பெப்ரவரி 11 ஆம் திகதி தொடங்குகிறது. (4)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## நடராஜனின் பொறுமையே அவரது திறமை- ரோஹித் சர்மா பாராட்டு





நடராஜன் தன்னுடைய பொறுமை மற்றும் திடமான தன்மையை வெளிப்படுத்தினார் என ரோஹித் சர்மா பாராட்டு தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா - இந்தியா இடையிலான 4 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனில் நடைபெற்று வருகிறது.

இந்தப் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த டி. நடராஜன், வோஷிங்டன் சுந்தர் ஆகியோர் அறிமுகம் ஆனார்கள்.

முகமது சிராஜ், ஷர்துல் தாகூர் உடன் இணைந்து இருவரும் அபாரமாக பந்து வீசினார்கள். டி. நடராஜன் 3 விக்கெட் வீழ்த்தினார்.

முக்கியமான கட்டத்தில் மேத்யூ வடே, லாபஸ்சேன் விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார். கடைசி விக்கெட்டாக ஹசில்வுட்டை க்ளீன் போல்டாக்கினார்.

இந்த நிலையில் அணியின் துணைத்தலைவரான ரோஹித் சர்மா, டி. நடராஜனை வெகுவாக பாராட்டியுள்ளார்.

உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், நடராஜன் மிகவும் சிறப்பாக பந்து வீசினார். சர்வதேச கிரிக்கெட்டில் நாட்டிற்கு வெளியே முதல் முறையாக தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களுக்கு எதிராக பந்து வீசுவது எளிதான காரியம் அல்ல.

ஆனால் டி. நடராஜன் எந்தவித நெருக்கடிக்கு ஆளாகவில்லை. அதிகமான பொறுமையுடன் வலுவாக தன்மையை வெளிப்படுத்தினார். அதிகமாக பேசுவதும் கிடையாது.

ஆனால், அவர் திடமான தனித்தன்மை வாய்ந்தவர். அவர் அணிக்காகவும் தனக்காகவும் சிறப்பாக செயற்பட விரும்புகிறார். அதனை இங்கே செய்து கொண்டிருக்கிறார் என ரோஹித் சர்மா மனதார பாராட்டியுள்ளார். (4)

## ஹர்த்திக், குருணால் பாண்டியாவின் தந்தை காலமானார்



இந்திய கிரிக்கெட் வீரர்களான ஹர்திக் பாண்டியா மற்றும் குருணால் பாண்டியா ஆகியோரின் தந்தை ஹிமான்ஷு மாரடைப்பால் நேற்று முன்தினம் காலமானார்.

அவரது மறைவுக்கு இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் விராட் ஹோலி உள்ளிட்ட பல் வேறு வீரர்கள், கிரிக்கெட் சங்கத்தினர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

குருணால் பாண்டியா தற்போது நடைபெற்று வரும் சையத் முஷ்டாக் அலி கோப்பை தொடரில் பரோடா அணியின் கப்டனாக செயற்பட்டு வந்தார்.

இந்த தொடரில் 3 போட்டிகளில் விளையாடிய குருணால், 4 விக்கெட்டுகளை கைப்பற்றியிருந்தார்.

அவரது தந்தை மறைவுக்கு பரோடா அணி இரங்கல் தெரிவித்துள்ளது. (4)

# கொரோனா வைரஸ் முடிவிற்கு வந்துள்ளதாக உணர்கிறேன்

## தடுப்பு மருந்து நிகழ்வு குறித்து பாராட்டுக்களை தெரிவித்தார் பிரதமர்

(கொழும்பு)

**இந்தியாவில் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தினை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளதை கொரோனா வைரஸின் முடிவின் ஆரம்பமாக கருதுவதாக இலங்கை தெரிவித்துள்ளது.**



இந்தியா கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தினை வழங்கும் பாரிய நடவடிக்கையினை ஆரம்பித்துள்ளமை குறித்து இந்தியப் பிரதமருக்கு இலங்கை ·பிரதமர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

மிகவும் முக்கியமான கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தினை செலுத்தும் பெரும் நடவடிக்கையினை ஆரம்பித்துள்ளமை குறித்து தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ள பிரதமர், இந்திய பிரதமருக்கும் மக்களுக்கும் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார்.

மேலும், இதனை தாங்கள் கொரோனா வைரஸின் முடிவின் ஆரம்பமாக கருதுகின்றோம் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இந்திய விஞ்ஞானிகளினதும் முன்னிலை பணியாளர்களினதும் அயராத முயற்சிகள் கொரோனா வைரஸிற்கு எதிரான போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்துள்ளதாக இந்திய பிரதமர் தெரிவித்துள்ளார்.

இலங்கை பிரதமரின் பாராட்டு செய்திக்கு நன்றி தெரிவித்து டுவிட்டரில் வெளியிட்டுள்ள செய்தியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தினை வேகமாக தயாரித்து, மருந்தினை வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பது ஆரோக்கியமான நோய் இல்லாத உலகத்திற்கான தங்கள் கூட்டு முயற்சி மிக முக்கியமானது எனவும் மோடி பதிவிட்டுள்ளார். (நி-4)

# மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுக்களை ஆராய விரைவில் புதிய ஜனாதிபதி ஆணைக்குழு நியமனம்

## ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அறிவிப்பு

(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டுக்கு முன்னர் மனித உரிமைகள் மீறல் தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆராய்வதற்காக புதிய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றினை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் தலைமையில் ஜனாதிபதியினால் எதிர்வரும் 2 மாத காலப்பகுதியினுள் இந்த ஆணைக்குழு நியமிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இறுதியாக ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழு ஒன்று கூடிய போது, நல்லாட்சி அரசாங்கம் இணக்கம் வெளியிட்ட இணை அனுசரணை யோசனையில் இருந்து விலகுவதாக தற்போதைய அரசாங்கம் அந்த ஆணைக்குழுவிற்கு உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது.

புதிய ஆணைக்குழு நியமிப்பதன் ஊடாக மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக இலங்கை அரசாங்கம் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளது.

இதற்கமைய நியமிக்கப் படவுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் மூலம் முன்னதாக ஸ்தாபிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, தருஸ்மன் அறிக்கை என்பது தொடர்பில் மீண்டும் அவதானம் செலுத்தப்படவுள்ளது.

அத்துடன் காணாமல் போனோர் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட பரணகம ஆணைக்குழுவின் அறிக்கையும் புதிய ஆணைக்குழுவினால் கண்காணிக்கப்படவுள்ளது.

இதேவேளை, யுத்தக் குற்றச்சாட்டு தொடர்பில் ஆராய்வதற்கு ஏற்புடைய பொறிமுறையொன்றை தயாரிக்குமாறு கோரி தமிழ்த் தேசிய பரப்பில் இயங்கும் கட்சிகள் உள்ளிட்ட 11 தரப்பினர் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பியுள்ள கடிதத்தின் பிரதிகள் ஏனைய நாடுகளின் பிரதிநிதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அந்த கடிதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன் உள்ளிட்ட தரப்பினர் கையெழுத்திட்டுள்ளனர்.

பொறுப்புக்கூறல் தொடர்பில் இலங்கையின் சுயாதீன பொறிமுறை ஏற்புடையதல்ல என்பதால் அது தொடர்பில் சுயாதீன விசாரணை ஒன்றை மேற்கொண்டு சகலருக்கும் இணையான நிரந்தர கால எல்லைக்குள் உரிய பொறிமுறையை ஸ்தாபிக்குமாறு அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# மட்டக்களப்பில் 7500 ஏக்கர்

## விவசாய செய்கை பாதிப்பு-விவசாயிகள் கவலை



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்த கடும் மழை காரணமாக போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் சுமார் 7500 ஏக்கர் விவசாயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்த கன மழை காரணமாக போரதீவுப்பற்று பிரதேசத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

சுமார் 24 ஆயிரம் ஏக்கர் காணிகளில் இம்முறை விவசாயச் செய்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தற்போது விவசாய நிலங்கள் அறுவடைக்கு தயாராகிவரும் நிலையில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் காரணமாக பெருமளவான விவசாயக் காணிகள் அழிவடைந்துள்ளன.

மிகவும் கஷ்டத்தின் மத்தியில் விவசாயச் செய்கையினை மேற்கொண்ட விவசாயிகளின் விவசாய நிலங்கள் வெள்ளத்தில் அழிந்துள்ளதனால் அரசாங்கம் அவர்களுக்கான நிவாரணங்களை வழங்க நடவடிக்கையெடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-4)




# நெற்பயிர்களைக் காப்பாற்றுவதற்கு நன்னீர் தேக்கத்தைக் குறைக்கத் திட்டம்

(சாவகச்சேரி)

**நாவற்குழிப் பகுதியில் உள்ள 400 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கையை அழிவில் இருந்து காப்பாற்றும் முகமாக நன்னீர் சேகரிக்கும் அளவினை இவ் வருடம் குறைப்பதற்கு தென் மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.**

அண்மையில் மாவட்ட அபி
விருத்தி ஒழுங்கிணைப்புக்
குழுத்தலைவர் அங்கஜன் இரா
மநாதன் தலைமையில் இடம்
பெற்ற கூட்டத்தில் நாவற்குழிப்
பால உவர்நீர்த் தடுப்புக் கத
வுகள் உரிய முறையில்
தேவைக்கேற்ப திறக்கப்படா
மையால் தொடர்ச்சியாக நெற்
பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி
அழிவடைந்து வருவதாக விவ
சாய அமைப்புக்கள் சுட்டிக் காட்
டப்பட்டதனை அடுத்தே நாவற்
குழிப் பாலத்தடியில் தேக்கப்
படும் நன்னீரின் அளவினை
இவ்வருடம் குறைப்பதற்கு நட
வடிக்கை எடுக்கப்பட்டுள்
ளது.

இது தொடர்பாக விவசாய
அமைப்புக்கள் கருத்து தெரி
விக்கையில், நாவற்குழிப் பால
உவர்நீர்த் தடுப்புக் கதவுகள்
(பறாஜ்) தேவைக்கேற்ப திறக்
கப்படாமையால் தென்மராட்சி
தெற்குப் பகுதியில் ஆறு கிராம
உத்தியோகத்தர் பிரிவுகளில்
உள்ள நெற்பயிர்கள் வெள்
ளத்தில் மூழ்கி அழி வைச்
சந்திக்கின்றன.

நன்னீர் நீர்த்தேக்கத்தில்
உள்ள நீரின் அளவினை உட
னடியாக குறைக்க நடவடிக்கை
எடுக்காத பட்சத்தில் ஒருமாத
காலத்தில் அறுவடை செய்யக்
கூடிய நிலையில் காணப்படு
கின்ற 400 ஏக்கர் நெற்பயிர்கள்
அழிவைச் சந்திக்க நேரிடும்.
எனவே அறுவடைக்கு தயா
ராகி வரும் நெற்பயிர்களைக்
காப்பாற்ற நடவடிக்கை எடுக்க
வேண்டும் எனத் தெரிவிக்கப்
பட்டுள்ளது.

இது தொடர்பாக நீர்ப்பா
சனத் திணைக்கள உத்தியோ
கத்தர் கருத்து தெரிவிக்கையில்,
கடல் மட்டத்திலிருந்து 4அடி
அளவில் நன்னீர் தேக்கப்படு
கிறது.

தேக்கும் நீரை சடுதியாகக்
குறைக்கும் பட்சத்தில் நிலத்தடி
நீருக்குப் பாதிப்பு ஏற்பட்க்கூடும்.
கடல் மட்டத்திலிருந்து 4அடி தேக்
கும் நீரை இரண்டு அடியாகக்
குறைத்தால் கூட நாவற்குழிப்
பகுதியில் உள்ள பயிர்களை அழி
வில் இருந்து மீட்பது கடினம்.
ஏனெனில் குறித்த வயற் பகுதி
நீரேந்து பிரதேசமாகக் காணப்
படுகிறது எனத் தெரிவித்திருந்த
னர்.

இருப்பினும் இவ்வருடம்
விளைந்த பயிர்களைக் காப்
பாற்றுவதற்காக நாவற்குழிப்
பால நீர்த்தேக்கத்தில் தேக்க
ப்படும் நீரின் அளவைக் குறைப்
பதாக ஒருங்கிணைப்புக் கூட்ட
த்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்
ளது.

தொடர்ச்சியான மழை மற்
றும் வெள்ளம் காரணமாக
தென்மராட்சிப் பகுதியிலஏரா‌ள
மான நெற்பயிர்கள் அழிவடை
ந்திருப்பதுடன், தற்போது
விளைந்து வரும் நெற்பயிர்
களும் வெள்ளம் மற்றும் தொடர்
மழை காரணமாக அழிவடை
யும் தறுவாயில் காணப்படுகின்
றமை குறிப்பிடத்தக்கது. (5-30)

# வைத்தியசாலை உள்ளக வீதிகள் புனரமைக்க அங்கஜன் நடவடிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்
தியசாலையின் உள்ளக வீதி
களை 2021ஆம் ஆண்டிற்
கான சப்ரிகம (நிறைவான கிரா
மம்) திட்ட நிதியில் புனரமைப்பு
மேற்கொள்ள நடவடிக்கை எடுப்
பதாக யாழ். மாவட்ட அபிவி
ருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்
தலைவர் அங்கஜன் இராமநா
தன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தென்மராட்சி
பிரதேச செயலகத்தில் இடம்
பெற்ற பிரதேச ஒருங்கிணை
ப்புக் குழுக்கூட்டத்தின் போது
வைத்தியசாலையின் வைத்
திய அத்தியட்சகர் திருமதி.
ம.டயாழினி, வைத்திய சாலை
யின் உள்ளக வீதிகள் புனர
மைக்கப்பட வேண்டிய தேவை
இருப்பதாக விடுத்த கோரிக்
கையினை அடுத்தே சப்ரிகம
திட்ட வேலைத்திட்டத்தில்
வைத்தியசாலையின் உள்ளக
வீதிகளை புனரமைக்க முன்
னுரிமை அளிக்க நடவடிக்கை
எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்
டுள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரி
ஆதார வைத்தியசாலையின்
வைத்திய அத்தியட்சகர் கரு
த்து தெரிவிக்கையில், வைத்
தியசாலையில் விபத்து மற்றும்
அவசர சிகிச்சைப் பிரிவுக்குச்
செல்லும் வீதி பிணவறைக்குச்
செல்லும் உள்ளக வீதி ஆகி
யன அமைக்கப்பட வேண்டிய
தேவைப்பாடு நிலவுகிறது.

சுமார் ஒரு கிலோ மீற்றர்
நீளமான உள்ளக வீதிகளே
புனரமைப்பு செய்ய வேண்டி
யுள்ளது. (5-30)

# வீதி புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(கரணவாய்)

யாழ்.அச்சுவேலி மத்திய
கல்லூரிக்கு முன்பாகச் செல்லும்
பிரதான வீதி மிக நீண்ட கால
மாக திருத்தப்படாமல் காணப்
படுகின்றது.

அதிகமான மக்கள், பயன்
படுத்தும் இவ்வீதி போக்கு
வரத்துச் செய்ய முடியாத நிலை
யில் குண்டும் குழியுமாக
காணப்படுகின்றது.

அண்மையில் பெய்த மழை
யினால் மேலும் சேதமடைந்து
வெள்ளம் தேங்கி நிற்பதனால்
அச்சுவேலி மத் திய கல்லூரி
மாணவர்களும் மக்களும்
பெரும் சிரமங்களை எதிர்
கொண்டுள்ளனர்.

எனவே இவ்வீதியினை புன
ரமைப்பு செய்யுமாறு சம்பந்தப்
பட்ட அதிகாரிகளிடம்மக்கள்கோரி
க்கை விடுத்துள்ளனர். (5-60)

# மருதனார் மடத்தில் வர்த்தக சங்கம் உருவாக்க அனுமதி வழங்கப்பட்டது

(குப்பிழான்)



மருதனார்மடம் வர்த்த
கர்கள் சார்பாக முன்வைக்
கப்பட்ட கோரிக்கையை ஏற்று
மருதனார்மடம் வர்த்தகர் சங்
கத்தை உருவாக்குவதற்கு
நேற்றைய உடுவில் பிரதேச
செயலக ஒருங்கிணைப்புக்
குழுக்கூட்டத்தில் அனுமதி
வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மருதனார்
மடம் வர்த்தகர் சங்கத்தை
விரைவில் உருவாக்குவதற்
கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்
பட்டுள்ளதாக மருதனார் மடம்
கடைத்தொகுதி வர்த்தகர்கள்
அறிவித்துள்ளனர்.

உடுவில் பிரதேச செயலக
பிரிவுக்கான அபிவிருத்தி ஒரு
ங்கிணைப்புக்குழுக்கூட்டம்
யாழ்.மாவட்டஅபிவிருத்தி ஒரு
ங்கிணைப்புக் குழுத் தலைவர்
அங்கஜன் இராமநாதன் தலை
மையில் நேற்று முன்தினம்
சனிக்கிழமை உடுவில் பிர
தேச செயலக மாநாட்டு மண்
டபத்தில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தின் போது
நீண்டகாலமாக சுன்னாகம்
வர்த்தகர் சங்கத்தின் கீழ் மரு
தனார்மடம் வர்த்தகர் சங்கம்
இயங்கிவந்ததாகவும், கொரோ
னாத்தொற்று அபாயத்தால்
மருதனார்மடம் கடைத் தொகு
திகள் பூட்டப்பட்டிருந்த போது
தாம் எதிர்நோக்கியுள்ள பாதிப்பு
க்கள் தொடர்பில் எந்தவிதமான
நடவடிக்கைகளையும் எடுக்க
முன்வரவில்லை என மருத
னார்மடம் வர்த்தகர்கள் சார்பாக
கலந்து கொண்ட பிரதிநிதி
சுட்டிக்காட் டினார்.

எனவே, மருதனார்மடம்
வர்த்தகர்களுக்கான தனியான
வர்த்தகர் சங்கத்தை உரு
வாக்க நடவடிக்கை எடுக்க
வேண்டும் எனக் கோரிக்கை
விடுத்தார். மேற்படி கோரிக்
கையை ஏற்று மருதனார்மடம்
வர்த்தகர் சங்கத்தை உருவாக்
குவதற்கான அனுமதி உடனடி
யாக வழங்கப்பட்டது. வலி.
தெற்குப் பிரதேசசபை இதற்கு
ஒத்துழைப்பு வழங்கி வர்த்த
கர் சங்கம் செயற்படுவதற்கான
ஏற்பாடுகளை மேற்கொள்ளு
மாறு அங்கஜன் இராமநாதன்
சபையின் தவிசாளர் தர்ஷனை
கேட்டுக் கொண் டார்.

இதேவேளை, மருதனார்
மடம் கடைத் தொகுதி
கொரோனா காரணமாக கடந்த
32 நாட்களாகப் பூட்டப்பட்டிருந்
தமையால் வர்த்தகர்களுக்கு
ஏற்பட்ட நட்ட இழப்பீட்டினைப்
பெற்றுத்தருவதுடன் மருத
னார்மடம் கடைத் தொகுதியை
நவீன முறையில் சீர்செய்து
புனரமைத்துத் தருமாறும் கோரி
அங்கஜன் இராமநாதன் மற்
றும் யாழ்.மாவட்ட அரசாங்க
அதிபருக்கான கோரிக்கைகள்
அடங்கிய மகஜர்களும் இதன்
போது கையளிக்கப்பட்டுள்
ளமை இங்கு குறிப்பிடத்தக்
கது. (5-4-18)

# சமிக்ஞை விளக்கு பொருத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

(குப்பிழான்)

மருதனார்மடம் சந்தியிலும்
வீதிச் சமிக்ஞை விளக்குப்
பொருத்துவதென உடுவில் பிர
தேச செயலக ஒருங்கிணை
ப்புக் குழுக் கூட்டத்தில் ஏகமன
தாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உடுவில் பிரதேச செயலக
பிரிவுக்கான அபிவிருத்தி ஒரு
ங்கிணைப்புக் குழுக்கூட்டம்
நேற்று முன்தினம் சனிக்கி
ழமை உடுவில் பிரதேச செய
லக மாநாட்டு மண்டபத்தில்
இடம் பெற்றது.

மேற்படி கூட்டத்தில் கலந்து
கொண்ட வலி. தெற்குப் பிரதேச
சபையின் ஐக்கியதேசியக் கட்சி
உறுப்பினர் பாலசிங்கம் சுரேஷ்
குமார் கருத்துத் தெரிவிக்கை
யில்,

மருதனார்மடம் சந்தி
போக்குவரத்து நடவடிக்கை
களில் ஈடுபடும் அனைவருக்
கும் மிக முக்கியமான இடமாக
அமைகிறது.

எனவே சுன்னாகம் சந்தி
யில் அமைக்கப்பட்டுள்ளது
போன்று மருதனார்மடம் சந்தி
யிலும் வீதிச் சமிக்ஞை விள
க்குப் பொருத்துவதன் மூலம்
விபத்துக்களைக் குறைத்துக்
கொள்ள முடியும் என சுட்டிக்
காட்டினார் .

அவரது கோரிக்கை ஏகமன
தாக ஏற்றுக் கொள்ளப்பட்டு
மேற்படி சந்தியில் வீதிச் சமி
க்ஞை விளக்குப் பொருத்துவது
எனத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் இது தொடர்பில்
வீதி அபிவிருத்தி அதிகார சபை
க்கு வேண்டுகோள் கடித
மொன்று அனுப்புவது எனவும்,
போக்குவரத்து அமைச்சரின்
கவனத்திற்கு கொண்டு செல்
வது எனவும் தீர்மானிக்கப்
பட்டுள்ளது. (5-18)

# பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(அராலி)

சங்கானை பிரதேச இளைஞர்
சம்மேளனத்தின் வருடாந்த
பொதுக்கூட்டமும் புதிய நிர்
வாகத் தெரிவும் நேற்று சங்
கானை பிரதேச செயலக பிர
தானமண்டபத்தில்நடை பெற்றது.

இதில் புதிய தலைவராக
த.சுஜீதரனும் செயலாளராக
இளைஞர் சேவைகள் உத்தி
யோகத்தர் ப.மதனராஜும்
பொருளாளராக பு.கஜிந்தனும்
அமைப்பாளராக ஜெ.சஜித்தும்
உபதலைவராக து.சுதர்சனும்
உபசெயலாளராக நா.நிசாந்
தனும் தெரிவு செய்யப்பட்ட
னர். (5-104)

# யாழ்.மத்திய கல்லூரி

## சர்வதேச கிரிக்கெட் அரங்கில் மத்தியின் மைந்தன்



### FELICITATION MESSAGE TO MAS.V.VIYASKANTH - CRICKETER AND OLD BOY OF JAFFNA CENTRAL COLLEGE.

Iam much delighted to deliver this Felicitation Message on the achievements of Mas.V.Viyaskanth at National level.

Jaffna Central College is a leading school in the country which has introduced cricket in the Jaffna region in the year 1881 by the then Principal of the College Rev.Fedrick Webster and ever since then the College has been contributing for the development of cricket in the Northern part of Sri Lanka and producing best cricker players playing well at Regional Level, National Level and at International Level.

"Battle of the North" is well known Island wide and world wide, which is a significant Cricket Tournament played annually between Jaffna Central College and St.John's College, Jaffna which are the two leading schools in the North. This event is also called as Cricket Festival of the North held for three days and this traditional cricket match has a long history of 114 years and thus produced Mas.Viyaskanth as one of the best cricket players. He was under 19 Captain of the Jaffna Central College and was selected to Sri Lankan under 19 Squad in the past. Recently he was selected to Lanka Premier League and successfully played for Jaffna Stallions team.

The Policy of the present Government of Sri Lanka and the Hon.Minister of Sports is that effort should be made to promote sports activities in the Northern Province in order to produce best players in sports and take part in National Teams to play on behalf of Sri Lanka.

I wish and like to see Mas.V.Viyaskanth taking part in the National Cricket Team of Sri Lanka and achieving best performance at the International Stadium representing the North.

**(Mrs)P.S.M.Charles,**
**Governor,**
**Northern Province.**



### மெதடிஸ்த திரு அவையின் வாழ்த்துச்செய்தி

இலங்கை கிரிக்கெட் வரலாற்றில் இன்னுமொரு மைல்கல் நடப்பட்டுள்ளது. நமது நாட்டின் இளைஞர்களால் பல சாதனைகளைச் செய்ய முடியும் என்பதிலும் எதிர்காலத்துக்கான இலக்கு நோக்கிய நகர்வை சரியான வழிகாட்டலில் சாதிக்க முடியும் என்பதையும் செல்வன் விஜயகாந் விஜாஸ்காந் அவர்களின் சாதனை நிரூபித்திருக்கிறது.களத்திலே அவரது ஆளுமை. மனப்பாங்கு ஆகியவை கிரிக்கெட் ரசிகர்களாலும் வீரர்கள் பலராலும் பாராட்டப்பட்டு ள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.மத்திய கல்லூரியின் 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணித்தலைவரான செல்வன் விஜாஸ்காந்தின் திறமைகளை சரியாக அடையாளம் கண்டதன் விளைவே இந்த வெற்றி. அவரது திறமை தனியே ஒரு அணியோடு நின்று விடாமலும் பல்வேறு களங்களில் பரிணமிக்க வேண்டுமெனவும் வாழ்த்துகிறேன்.

யாழ்.மத்திய கல்லூரியும் விளையாட்டுத்துறையில் இன்னும் ஆர்வமாய் தனது தளங்களைப் பதித்துக் கொள்ள செல்வன் விஜாஸ்காந் வழிவகுத்துத் கொடுத்திருக்கிறார்.

இத்தொடரிலும் எதிர்காலத்திலும் சிறப்பாக முன்னேற வாழ்த்துகிறேன்.

இறையாசி அனைவரோடும் இருப்பதாக.
அருள்திரு.கலாநிதி.கே.ஜெரேமியா அருள்ராஜா.
தலைவர்.வடக்கு-கிழக்கு திருமாவட்ட அவை.
இலங்கை மெதடிஸ்த திருஅவை.



### ஆசிச் செய்தி

அண்மையில் யாழ்.மக்களின் நீண்டகால கனவு நினைவாகிய நன்னாள் அமையப் பெற்றது. யாழ்.வாழ் கிரிக்கெட் ரசிகர்கள் அனைவருக்கும் பெரும் மகிழ்ச்சியை நல்கியது என்றால் மிகையாகாது. அதிலும் யாழ்.மத்தியின் மைந்தர்கள் இரட்டிப்பு மகிழ்ச்சி கொண்டார்கள் என்பது நிதர்சனம். யாழ்.மண்ணிற்கு கிரிக்கெட் விளையாட்டை அறிமுகப்படுத்திய பாடசாலை யாழ்.மத்திய கல்லூரியே. மத்திய தாய் பெற்றெடுத்த மைந்தன் விஜயகாந் விஜாஸ்காந் சர்வதேச தர வீரர்களுடன் ஆடிய முதல் யாழ்.தமிழன் என்ற பெருமையை யாழ்.கிரிக்கெட் ரசிகர்களுக்கும் மத்திய தாய்க்கும் பெற்றுக்கொடுத்து வரலாற்று சாதனை ஒன்றை பதிவு செய்துள்ளான்.

"ஈன்றபொழுதின் பெரிதுவக்கும் தன்மகனை சான்றோன் எனக் கேட்டதாய்" என்ற வாக்கினை மெய்ப்பித்து மத்திய கல்லூரி தாய்க்கும் தனது தாய் தந்தையருக்கும் வாழ்வின் உன்னதத்தை உய்வித்தான்.

விஜாஸ்காந் என்கின்ற யாழ்.கிரிக்கெட் தமிழனை உருவாக்கிய கல்லூரி முதல்வர் மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்கும் பழைய மாணவர்களுக்கும் இவ்வேளையிலே நன்றி கலந்த நல்வாழ்த்துக்களை கூறிநிற்கின்றேன்.

இன்னும் பல சர்வதேச வீரர்களை யாழ்.மத்திய கல்லூரி தாய் உருப்பெறச்செய்ய வேண்டுமென்றும் எம் குல தெய்வமாம் அன்னை வீரமாகாளி தாயின் பாதம் பணிந்து நல்லாசிகள் கூறிநிற்கின்றேன்.

தெளிவே என் சிந்தனை

சாமஸ்ரீ தேசாமான்ய
இராஜஸ்ரீ சிவ.கமல்ராஜ்குருக்கள்
(பிரதம குருவும், ஆதீனகர்த்தாவும் வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்)



**செல்வன் விஜயகாந் விஜாஸ்காந்**
**(தலைவர், யாழ்.மத்திய கல்லூரி U 19 கிரிக்கெட் அணி)**



### வாழ்த்துச்செய்தி

விஜஸ்காந் வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரி மற்றும் யாழ்.பரியோவான் கல்லூரி அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் யாழ்.மத்தியின் அணித்தலைவராக திகழ்ந்திருந்து தனது திறமையான விளையாட்டின் மூலம் அனைவரிடத்திலும் பெரும் எதிர்பார்ப்பினை பெற்று இலங்கை தேசிய அணியினருடன் பயிற்சிகளில் ஈடுபட்டு 19 வயதிற்குட்பட்ட தேசிய அணியில் இடம்பெற்றிருந்தார். "லங்கா பிறீமியர் லீக்" சுற்றுப்போட்டியில் தெரிவுசெய்யப் பட்டு யாழ்.ஸ்ராலியன்ஸ் அணிக்கான குழாமில் இணைந்து தனது பந்துவீச்சு திறமையின் பயனாக கொழும்பு கிங்ஸ் அணியுடனான போட்டியில் கலந்து கொண்டு உலக அரங்கில் முன்னணி சகலதுறை ஆட்டக்காரரான அஞ்சலோ மத்தியூஸ் இன் விக்கெட்டை கைப்பற்றி தனது சிறப்பான பந்து வீச்சினை வெளிப்படுத்தியிருந்ததை நாம் அனைவரும் கண்டுகளித்திருந்தோம்.

இவ்வாறாக வளர்ந்து வரும் விளையாட்டு வீரனான விஜாஸ்காந் எதிர்வரும் காலங்களில் இலங்கையின் தேசிய அணியில் கலந்து போட்டிகளில் பங்குபற்றி எமது நாட்டினதும் பிரதேசத்தினதும் புகழை நிலைநாட்டிச் செல்வார் என்பதில் ஐயமில்லை. இவரது வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த பாடசாலை அதிபர். பயிற்றுவிப்பாளர்கள் அனைவருக்கும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இ.இளங்கோவன். செயலாளர்.
கல்வி. பண்பாட்டலுவல்கள். விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.வடமாகாணம்.



### வாழ்த்துச்செய்தி

யாழ்.மத்திய கல்லூரியினது 19 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் அணித்தலைவர் செல்வன் வி. விஜாஸ்காந் அவர்கள் லங்கா பிறீமியர் சுற்றுப் போட்டிக்கான யாழ்.ஸ்ராலியன்ஸ் அணிக்கு தெரிவு செய்யப்பட்டிருப்பதன் மூலம் யாழ்.மண்ணிற்கும் வடக்கு மாகாணத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இவர் யாழ்.மத்திய கல்லூரி கிரிக்கெட் அணித்தலைவராக சிறப்பாக செயற்பட்டுள்ளார். லங்கா பிறீமியர் சுற்றுப் போட்டிகளிலும் சிறப்பாக விளையாடி அனைவரினதும் பாராட்டினையும் பெற்றுள்ளார். இதன் மூலம் இவர் தமிழ் பேசும் விளையாட்டு வீர. வீராங்கனைகளுக்கு விளையாட்டுத்துறையில் பிரகாசிப்பதற்கான தன்னம்பிக்கையினையும். ஊக்கத்தினையும் ஏற்படுத்தி கொடுத்துள்ளார். இவர் கிரிக்கெட் விளையாட்டில் மேலும் பல சாதனைகளை படைத்து தேசிய ரீதியான போட்டிகளிலும் விளையாடி சாதனைகள் படைக்க வாழ்த்துகிறோம்.

செ.உதயகுமார்.
மாகாணக் கல்விப் பணிப்பாளர். வடக்கு மாகாணம்.



### வாழ்த்துச்செய்தி

யாழ்.மாவட்டத்தில் விளையாட்டுத்துறையில் முன்னணி வகிக்கும் யாழ்.மத்திய கல்லூரியின் இளஞ்சிங்கமான செல்வன் விஜாஸ்காந் அவர்கள் LPL துடுப்பாட்டம் 2020 இல் பங்குபற்றி இலங்கை சர்வதேச துடுப்பாட்ட வீரர்களுடன் விளையாடி அளப்பரிய சாதனைகளால் கல்லூரி அன்னையின் நற் பெயரை நிலைநாட்டி கல்லூரிச் சமூகத்திற்கு அளப்பரிய கௌரவத்தையும் பெருமையும் தந்துள்ளார். அவருக்கும் அவரது சீரிய செயற்பாட்டுக்கும் உறுதுணையாகவிருந்த கல்லூரி அதிபர். விளையாட்டு பொறுப்பாசிரியர். பயிற்றுநர். பெற்றோர் மற்றும் அவரது நண்பர்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் பழைய மாணவர் சங்கத்தினதும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

**திரு.யோகலிங்கம்,தலைவர்.**
**பழைய மாணவர் சங்கம், யாழ் மத்திய கல்லூரி.**



### கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி

நீண்ட துடுப்பாட்ட பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் செல்வன் வி.விஜாஸ்காந்த் இனுடைய லங்கா பிறீமியர் லீக் (LPL) சுற்றுப்போட்டியில் **Jaffna Stallians** அணி சார்பாக பங்குபற்றியமையும் அவரது திறன் மிக்க ஆட்டமும் ஒரு வரலாறாகும். சிறந்த கல்லூரி பயிற்றுவிப்பாளர்களால் விஜாஸ்காந்த் கடந்த 7 வருடங்களாக பயிற்றப்பட்டார். வட மாகாணத்திலும் வட மாகாணத்திற்கு வெளியிலும் பிரபலயம் மிக்க பாடசாலைகளுடன் விளையாடுவதற்கு கல்லூரி அவருக்கு களம் அமைத்து கொடுத்தது. துடுப்பாட்டம் என்பது ஒரு வசதிபடைத்த சமூகத்தில் தான் அதன் செலவுகளை தாக்குப்பிடிக்க இயலும். ஆனால் மத்திய கல்லூரி சமூகத்தில் பெரும் சவாலாகவே துடுப்பாட் டம் வளர்க்கப்பட்டது. இன்று சிகரத்தை தொட்டுள்ளது. இதற்கு பக்கபலமாக இருந்தது பழைய மாணவர்களும் பாடசர்லை அபிவிருத்தி சங்கமும் ஆகும்.

விஜாஸ்காந்த் துடுப்பாட்டத்தை தனது இதயத் துடிப்பாக கொண்டவர்.தேசிய அணியில் விளையாட வேண்டும் என்று கனவு காண்பவர். அதனால் இன்று துடுப்பாட்டத்தின் மூலம் பொருளாதார ரீதியான பயனை பெறலாம் என்பதை எல்லா வீரர்களுக்கும முன்மாதிரியாக காட்டியவர். எந்த ஒரு கருமத்திலும் சிறப்புத் தேர்ச்சியும் முதன்மையும் பெற வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் தான் இத்தகைய மேன்மையை பெற முடியும். விஜாஸ்காந்தின் துடுப்பாட்ட திறன் மேன்மேலும் சிறக்க வாழ்த்துக்கள்.

கலாநிதி எஸ்.கே.எழில்வேந்தன்
அதிபர். யாழ்.மத்தியகல்லூரி



### சர்வதேச மட்டத்தில் சாதனை படைப்பீர்

யாழ்.வலயத்துக்குட்பட்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவன் விஜயகாந் விஜாஸ்காந் கிரிக்கெட் துறையில் பாடசாலை மட்டத்திலிருந்து **LPL** தொடரில் பங்குபற்றுவதற்குத் தெரிவு செய்யப்பட்டமை மிக மகிழ்வான விடயம். இவரது திறமை இன்று தேசிய மட்டத்தில் அனைவராலும் அதிகமாகப் பேசப்படும் ஒன்றாக உள்ளது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதன் வரலாற்றில் இவ்வாறான பலரை வேறுபட்ட பல துறைகளிலும் வழங்கிய பெருமையைக் கொண்ட பாடசாலை. பாடசாலை மட்டத்தில் இவரை ஊக்குவித்து வழிகாட்டிய அதிபர் மற்றும் விளையாட்டுத்துறை சார்ந்த அனைவருக்கும் பாராட்டுக்கள். விஜயகாந் விஜாஸ்காந் தனது திறமையைச் சரியான இடத்தில் சரியாகப் பயன்படுத்தி மென்மேலும் விற்பன்னராக உருவெடுப்பீர்கள் என யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் என்ற ரீதியிலும் தனிப்பட்ட ரீதியிலும் வாழ்த்துகின்றேன்.

செல்வரட்ணம் சந்திரராஜா.
வலயக்கல்விப் பணிப்பாளர்.
யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்.
நல்லூர். யாழ்ப்பாணம்.



### வாழ்த்துச்செய்தி

அகிலமெங்கும் புகழ் பரப்பி நிற்கின்ற வடமாகாணத்தின் விளையாட்டுப் பாடசாலையான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தன் விளையாட்டுத்துறை சார்ந்த சாதனையொன்றை தன் வரலாற்றுப் புத்தகத்தில் மீண்டும் பதிவு செய்திருக்கின்ற இத் தருணத்திலே. மத்தியின் மைந்தனாகிய செல்வன் விஜயகாந்த் விஜாஸ்காந்த் அவர்களுடைய துடுப்பாட்ட சாதனையை இட்டு பெருமிதம் கொள்கின்றது.

விளையாட்டுத்துறையில் சர்வதேச தரத்திலான வீரர்களை உருவாக்கிய பெருமை எமது கல்லூரியை சாரும். 205 வருட பாரம்பரியத்தைக் கொண்ட எமது பாடசாலையில் ஒலிம்பிக் போட்டியில் பங்குகொண்ட திரு.நா.எதிர்வீரசிங்கம் எனும் மத்தியின் புதல்வனோடு ஆரம்பித்த எமது சாதனைகள் இன்னும் ஓய்ந்து விடவில்லை என்பதற்கு விஜாஸ்காந்த் ஒரு எடுத்துக்காட்டு. மாவட்ட. மாகாண அணிகளிலும் இடம்பிடித்து தன் திறனை வெளிக்காட்டி இன்று சர்வதேச தரத்திலான போட்டிகளில் பங்குபற்றும் அளவிற்கு வளர்ந்துள்ளமை எம்மை பெருமையுறச் செய்கின்றது.

திரு.நடராஜா மகேஸ்வரன்
கல்லூரியின் விளையாட்டுத்துறை முதல்வர்



### வாழ்த்துச்செய்தி

எமது கல்லூரி மாணவன் சர்வதேச விளையாட்டு வீரர்களுக்கு இணையாக களம் இறங்கி இருப்பது உலகெங்கும் பரந்து வாழும் யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர்க்கு பெருமையே! பாரம்பரியமும். பழம்பெருமையும் வாய்ந்த எமது கல்லூரியின் மாணவர்கள் தேசிய. சர்வதேச ரீதியில் கல்வியிலும். விளையாட்டுத்துறையிலும் கணிசமான சாதனைகளைப் படைத்திருக்கிறார்கள்.

விஜாஸ்காந் தடைகள் அனைத்தையும் தாண்டி மிகப் பெரிய வெற்றிகளை அடைய வேண்டும். அந்தவெற்றிகள் எமது மாணவர்களுக்கு மட்டுமல்லாது எமது மண்ணில் வாழும் அனைத்து மாணவர்களுக்கும் நம்பிக்கையை வழங்கும் ஊன்றுகோலாகட்டும். இங்கிலாந்து வாழ் யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களின் ஆசிகளும் வாழ்த்துக்களும். வலம்புரி பத்திரிகை ஊடாக சென்றடையட்டும்.

"வானமும் வசப்படும்"
ச.ஜோய்பூரணச்சந்திரன்.
தலைவர். பழைய மாணவர்கள் சங்கம் (UK)

## "மத்தியின் மணிக்கொடி நித்தமும் நிலைக்கும்"

(C-1187)

# நெற்பயிர்களைக் காப்பாற்றுவதற்கு நன்னீர் தேக்கத்தைக் குறைக்கத் திட்டம்

(சாவகச்சேரி)

**நாவற்குழிப் பகுதியில் உள்ள 400 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கையை அழிவில் இருந்து காப்பாற்றும் முகமாக நன்னீர் சேகரிக்கும் அளவினை இவ் வருடம் குறைப்பதற்கு தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

அண்மையில் மாவட்ட அபிவிருத்தி ஒழுங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் நாவற்குழிப் பால உவர்நீர்த் தடுப்புக் கதவுகள் உரிய முறையில் தேவைக்கேற்ப திறக்கப்படாமையால் தொடர்ச்சியாக நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி அழிவடைந்து வருவதாக விவசாய அமைப்புக்கள் சுட்டிக் காட்டப்பட்டதனை அடுத்தே நாவற்குழிப் பாலத்தடியில் தேக்கப்படும் நன்னீரின் அளவினை இவ்வருடம் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விவசாய அமைப்புக்கள் கருத்து தெரிவிக்கையில், நாவற்குழிப் பால உவர்நீர்த் தடுப்புக் கதவுகள் (பறாஜ்) தேவைக்கேற்ப திறக்கப்படாமையால் தென்மராட்சி தெற்குப் பகுதியில் ஆறு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி அழிவைச் சந்திக்கின்றன.

நன்னீர் நீர்த்தேக்கத்தில் உள்ள நீரின் அளவினை உடனடியாக குறைக்க நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் ஒருமாத காலத்தில் அறுவடை செய்யக் கூடிய நிலையில் காணப்படுகின்ற 400 ஏக்கர் நெற்பயிர்கள் அழிவைச் சந்திக்க நேரிடும். எனவே அறுவடைக்கு தயாராகி வரும் நெற்பயிர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர் கருத்து தெரிவிக்கையில், கடல் மட்டத்திலிருந்து 4அடி அளவில் நன்னீர் தேக்கப்படுகிறது.

தேக்கும் நீரை சடுதியாகக் குறைக்கும் பட்சத்தில் நிலத்தடி நீருக்குப் பாதிப்பு ஏற்படக்கூடும். கடல் மட்டத்திலிருந்து 4அடி தேக்கும் நீரை இரண்டு அடியாகக் குறைத்தால் கூட நாவற்குழிப் பகுதியில் உள்ள பயிர்களை அழிவில் இருந்து மீட்பது கடினம். ஏனெனில் குறித்த வயற் பகுதி நீரேந்து பிரதேசமாகக் காணப்படுகிறது எனத் தெரிவித்திருந்தனர்.

இருப்பினும் இவ்வருடம் விளைந்த பயிர்களைக் காப்பாற்றுவதற்காக நாவற்குழிப் பால நீர்த்தேக்கத்தில் தேக்கப்படும் நீரின் அளவைக் குறைப்பதாக ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான மழை மற்றும் வெள்ளம் காரணமாக தென்மராட்சிப் பகுதியிலஏராளமான நெற்பயிர்கள் அழிவடைந்திருப்பதுடன், தற்போது விளைந்து வரும் நெற்பயிர்களும் வெள்ளம் மற்றும் தொடர் மழை காரணமாக அழிவடையும் தறுவாயில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-30)

# வைத்தியசாலை உள்ளக வீதிகள் புனரமைக்க அங்கஜன் நடவடிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் உள்ளக வீதிகளை 2021ஆம் ஆண்டிற்கான சப்ரிகம (நிறைவான கிராமம்) திட்ட நிதியில் புனரமைப்பு மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் திருமதி. ம.டயாழினி, வைத்திய சாலையின் உள்ளக வீதிகள் புனரமைக்கப்பட வேண்டிய தேவை இருப்பதாக விடுத்த கோரிக்கையினை அடுத்தே சப்ரிகம திட்ட வேலைத்திட்டத்தில் வைத்தியசாலையின் உள்ளக வீதிகளை புனரமைக்க முன்னுரிமை அளிக்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் கருத்து தெரிவிக்கையில், வைத்தியசாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்குச் செல்லும் வீதி பிணவறைக்குச் செல்லும் உள்ளக வீதி ஆகியன அமைக்கப்பட வேண்டிய தேவைப்பாடு நிலவுகிறது.

சுமார் ஒரு கிலோ மீற்றர் நீளமான உள்ளக வீதிகளே புனரமைப்பு செய்ய வேண்டியுள்ளது. (5-30)

# வீதி புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(கரணவாய்)

யாழ்.அச்சுவேலி மத்திய கல்லூரிக்கு முன்பாகச் செல்லும் பிரதான வீதி மிக நீண்ட காலமாக திருத்தப்படாமல் காணப்படுகின்றது.

அதிகமான மக்கள், பயன்படுத்தும் இவ்வீதி போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் குண்டும் குழியுமாக காணப்படுகின்றது.

அண்மையில் பெய்த மழையினால் மேலும் சேதமடைந்து வெள்ளம் தேங்கி நிற்பதனால் அச்சுவேலி மத் திய கல்லூரி மாணவர்களும் மக்களும் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

எனவே இவ்வீதியினரை புனரமைப்பு செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம்மக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். (5-60)

# மருதனார் மடத்தில் வர்த்தக சங்கம் உருவாக்க அனுமதி வழங்கப்பட்டது

(குப்பிழான்)

மருதனார்மடம் வர்த்தகர்கள் சார்பாக முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று மருதனார்மடம் வர்த்தகர் சங்கத்தை உருவாக்குவதற்கு நேற்றைய உடுவில் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



இந்நிலையில் மருதனார் மடம் வர்த்தகர் சங்கத்தை விரைவில் உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மருதனார் மடம் கடைத்தொகுதி வர்த்தகர்கள் அறிவித்துள்ளனர்.

உடுவில் பிரதேச செயலக பிரிவுக்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் யாழ்.மாவட்டஅபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தின் போது நீண்டகாலமாக சுன்னாகம் வர்த்தகர் சங்கத்தின் கீழ் மருதனார்மடம் வர்த்தகர் சங்கம் இயங்கி வந்ததாகவும், கொரோனாத்தொற்று அபாயத்தால் மருதனார்மடம் கடைத் தொகுதிகள் பூட்டப்பட்டிருந்த போது தாம் எதிர்நோக்கியுள்ள பாதிப்புக்கள் தொடர்பில் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்க முன்வரவில்லை என மருதனார்மடம் வர்த்தகர்கள் சார்பாக கலந்து கொண்ட பிரதிநிதி சுட்டிக்காட் டினார்.

எனவே, மருதனார்மடம் வர்த்தகர்களுக்கான தனியான வர்த்தகர் சங்கத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். மேற்படி கோரிக்கையை ஏற்று மருதனார்மடம் வர்த்தகர் சங்கத்தை உருவாக்குவதற்கான அனுமதி உடனடியாக வழங்கப்பட்டது.வலி. தெற்குப் பிரதேசசபை இதற்கு ஒத்துழைப்பு வழங்கி வர்த்தகர் சங்கம் செயற்படுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அங்கஜன் இராமநாதன் சபையின் தவிசாளர் தர்ஷனை கேட்டுக் கொண் டார்.

இதேவேளை, மருதனார் மடம் கடைத் தொகுதி கொரோனா காரணமாக கடந்த 32 நாட்களாகப் பூட்டப்பட்டிருந்தமையால் வர்த்தகர்களுக்கு ஏற்பட்ட நட்ட இழப்பீட்டினைப் பெற்றுத்தருவதுடன் மருதனார்மடம் கடைத் தொகுதியை நவீன முறையில் சீர்செய்து புனரமைத்துத் தருமாறும் கோரி அங்கஜன் இராமநாதன் மற்றும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கான கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களும் இதன் போது கையளிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (5-4-18)

# சமிக்ஞை விளக்கு பொருத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

(குப்பிழான்)

மருதனார்மடம் சந்தியிலும் வீதிச் சமிக்ஞை விளக்குப் பொருத்துவதென உடுவில் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உடுவில் பிரதேச செயலக பிரிவுக்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்ட வலி. தெற்குப் பிரதேச சபையின் ஐக்கியதேசியக் கட்சி உறுப்பினர் பாலசிங்கம் சுரேஷ் குமார் கருத்துத் தெரிவிக்கையில்,

மருதனார்மடம் சந்தி போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைவருக்கும் மிக முக்கியமான இடமாக அமைகிறது.

எனவே சுன்னாகம் சந்தியில் அமைக்கப்பட்டுள்ளது போன்று மருதனார்மடம் சந்தியிலும் வீதிச் சமிக்ஞை விளக்குப் பொருத்துவதன் மூலம் விபத்துக்களைக் குறைத்துக் கொள்ள முடியும் என சுட்டிக் காட்டினார் .

அவரது கோரிக்கை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி சந்தியில் வீதிச் சமிக்ஞை விளக்குப் பொருத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் இது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வேண்டுகோள் கடிதமொன்று அனுப்புவது எனவும், போக்குவரத்து அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்வது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (5-18)

# பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(அராலி)

சங்கானை பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நேற்று சங்கானை பிரதேச செயலக பிரதான மண்டபத்தில்நடைபெற்றது.

இதில் புதிய தலைவராக த.சுஜீதரனும் செயலாளராக இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் ப.மதனராஜும் பொருளாளராக பு.கஜிந்தனும் அமைப்பாளராக ஜெ.சஜித்தும் உபதலைவராக து.சுதர்சனும் உபசெயலாளராக நா.நிசாந்தனும் தெரிவு செய்யப்பட்டனர். (5-104)

# இராசிபலன்

18.01.2021
தை 05, திங்கட்கிழமை
பஞ்சமி முற்பகல் 11.34 மணிவரை
பூரட்டாதி முற்பகல் 10.04 மணிவரை
சுபநேரம் 12.35 - 2.05 மணிவரை
இராகுகாலம் 8.05 - 9.35 மணிவரை
சந்திராஷ்டமம்:- மகம்
சஷ்டி விரதம்

வளவன்


மேஷம்

வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் நிலை ஏற்படலாம், பயணத்தால் பலனுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


ரிஷபம்

மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், செல்வாக்கு மேலோங்கும் நாள், உறவினர்களின் வருகையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


மிதுனம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, தொழில் வளர்ச்சி கூடும் நாள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள்.


கடகம்

மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள்.


சிம்மம்

பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தேக நலனில் கவனம் தேவை, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வாகன பழுதுச் செலவுகள் கூடும், சஞ்சலங்கள் கூடும் நாள்.


கன்னி

சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு, முயற்சிகள் கைகூடும்.


துலாம்

நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுபசெய்திகள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகும், தலைமைப்பதவிகள் உங்களைத் தேடி வரலாம், வருமானம் திருப்தி தரும்.


விருச்சிகம்

மகிழ்ச்சி கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.


தனுசு

எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறும், பெற்றோர் மீது பிரியம் கூடும், வருமானம் திருப்தி தரும்.


மகரம்

பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சேமிப்பில் அக்கறை கூடும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.


கும்பம்

ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் தீரும், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, நண்பர்களால் வளர்ச்சி கூடும், பயணங்கள் கைகூடும்.


மீனம்

திட்டமிட்ட காரியமொன்றில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், சிந்தனை மிகுதியான நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம்.

இதயத் தூய்மையே உண்மை அழகு.

# விசாரணைகளில் தலையிட பலர் முயற்சி
# பொலிஸ்மா அதிபர் கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

**குற்றச்செயல்கள் குறித்து பொலிஸார் மேற்கொண்டுள்ள விசாரணைகளில் தலையிடுவதற்கும் செல்வாக்கு செலுத்துவதற்கும் சில இனந்தெரியாத சக்திகள் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன என பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



மேலும் அனைத்து பொலிஸ் நிலையங்களினதும் பொறுப்பதிகாரிகளிற்கு அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அத்தோடு பலர் பொலிஸ் உத்தியோகத்தர்களை தொலைபேசிகளில் தொடர்பு கொண்டு தாங்கள் பொலிஸ்மா அதிபரின் உறவினர்கள் என தெரிவிக்கின்றனர் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் தங்களின் சார்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இதனை தொடர்ந்து அவர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்குமாறும் பொலிஸ்மா அதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளார். (நி-4)

# கிழக்கு முனையத்தின் பங்குகளை வாங்க எமது நாட்டிலே நிறுவனங்கள் உள்ளன

## -அசாத் சாலி-

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் பங்குகளை பெற்றுக்கொள்ள உள்நாட்டில் நிறுவனங்கள் இருக்கின்றன. அரசாங்கம் முடியுமானால் அதுதொடர்பில் விளம்பரப்படுத்த வேண்டும் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார்.

தேசிய ஐக்கிய முன்னணி நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

நாட்டின் வளங்கள் எதனையும் வெளிநாடுகளுக்கு வழங்கப்போவதில்லை என்றும் கடந்த அரசாங்க காலத்தில் வழங்கியவற்றை மீண்டும் பெற்றுக் கொள்வோம் எனவும் தெரிவித்தே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

ஆனால் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று ஒரு மாதத்திலேயே சங்கிரில்லா ஹோட்டலுக்கு அடுத்ததாக இருந்த காணியை அரசாங்கம் வெளிநாட்டு கம்பனி ஒன்றுக்கு விற்பனை செய்தது.

அத்துடன் தற்போது கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையை இந்தியாவுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.

ஆனால் கிழக்கு முனையத்தை வழங்குவதில்லை என குறித்த விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் மற்றும் பிரதமர் தெரிவித்து வருகின்றனர்.

கிழக்கு முனையத்தின் 49 வீத பங்கை இந்தியாவுக்கு வழங்க தீர்மானித்திருப்பதாகவும் அதனை மாற்ற முடியாது எனவும் ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார்.

மேலும் துறைமுக தொழிற்சங்கங்களுடன் ஜனாதிபதி நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்திருக்கின்றது.

அதனால் நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்திருப்பதை அரசாங்கம் தெரிவித்து, கொழும்பு துறைமுகத்தின் 49 வீத பங்கை பெற்றுக்கொள்ள யாரேனும் முன்வந்தால் அதனை வழங்குவதற்கு தயார் என விளம்பரப்படுத்த வேண்டும்.

அவ்வாறு செய்தால் உள்நாட்டில் இருக்கும் கம்பனிகள் அதனைப் பெற்றுக்கொள்ள முன் வரும் என்ற நம்பிக்கை எமக்கிருக்கின்றது என அசாத் சாலி தெரிவித்தார். (நி-4)

# மீண்டும் திறக்கப்படும் கட்டுநாயக்க சுகாதார நடைமுறைகள் வெளியிடப்பட்டது

(கொழும்பு)

நாட்டிலுள்ள சர்வதேச விமான நிலையங்கள் எதிர்வரும் 21ஆம் திறக்கப்பட உள்ளதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், சுற்றுலாப் பயணிகளுக்கான சுகாதார நடைமுறைகளை சுற்றுலாத்துறை அமைச்சு வெளியிட்டுள்ளது.

இதன்படி, அனைத்து நாடுகளினதும் சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தர முடியும். எனினும், உள்வருகைக்காக முன் அனுமதி உள்ளிட்ட ஒரு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடுமையான தனிமைப்படுத்தல் விதிமுறைகள் பயன்படுத்தப்படமாட்டாது எனவும், அவர்களுக்கு வழங்கப்பட்ட ஹோட்டல்களில் தங்கியிருப்பது அவசியம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, முதலாம் கட்ட பாதுகாப்பு அம்சங்கள் கொண்ட 55 ஹோட்டல்கள் 11 மாவட்டங்களில் சுற்றுலாத்துறை அமைச்சினால் பெயரிடப்பட்டுள்ளன.

இந்த ஹோட்டல்களில் உள்நாட்டு மக்களுக்கு தங்க அனுமதி வழங்கப்படமாட்டாது என சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், சுற்றுலாப் பயணிகள் வருகை தர 96 மணி நேரத்துக்கு முன்னதாகவும், வருகைதந்த பின்னரும் கட்டாய பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்வது அவசியம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா தடுப்பூசி பெற்ற சுற்றுலா பயணிகளுக்கு சிறப்பு சலுகை வழங்கப்படவில்லை எனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# கோவேக்சின் தடுப்பூசியால் பக்கவிளைவு ஏற்பட்டால்

# இழப்பீடு வழங்கத் தயார்- பயோடெக் நிறுவனம் அறிவிப்பு

(டில்லி)

**கோவேக்சின் தடுப்பூசியால் ஏதேனும் பக்க விளைவுகள் ஏற்பட்டால் அதற்கு தகுந்த இழப்பீடு வழங்கப்படும் எனச் சுகாதார ஊழியர்களுக்கு பாரத் பயோடெக் நிறுவனம் உத்தரவாதம் அளித்துள்ளது.**




இந்தியாவில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி நேற்று காணொலிகாட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.

அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் ஐதராபாத்தின் பாரத் பயோடெக் நிறுவனமும், இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலும் இணைந்து உருவாக்கியுள்ள கோவேக்சின் தடுப்பூசியின் முதல் டோஸ் சுகாதார ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டது.

முன்னதாக கோவேக்சின் தடுப்பூசியால் ஏதேனும் பக்க விளைவுகள் ஏற்பட்டால் அதற்கு தகுந்த இழப்பீடு வழங்கப்படும் என சுகாதார ஊழியர்களுக்கு பாரத்பயோடெக் நிறுவனம் உத்தரவாதம் அளித்துள்ளது. இதுதொடர்பான படிவத்தில் அவர்கள் கையெழுத்திட்ட பின்னரே அவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது.

அந்த படிவத்தில், "கோவேக்சின் கொரோனாவுக்கு எதிராக எதிர்ப்பு சக்தியை உற்பத்தி செய்யும் திறனை முதலாம் மற்றும் 2ஆம் கட்ட சோதனைகளில் நிரூபித்துள்ளன. இருப்பினும் மருத்துவ செயற்றிறன் இன்னும் நிறுவப்படவில்லை. இது இன்னும் 3ஆம் கட்ட மருத்துவ பரிசோதனையில் ஆய்வு செய்யப்படுகிறது" என குறிப்பிடப்பட்டுள்ளது.

கோவேக்சின் தடுப்பூசியை செலுத்திக்கொண்ட நபருக்கு ஏதேனும் பாதகமான நிகழ்வு ஏற்பட்டால் பாதிக்கப்பட்ட நபருக்கு அரசு நியமித்த வைத்தியசாலைகளில் மருத்துவ ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தரமான பராமரிப்பு வழங்கப்படும் என்று பாரத் பயோடெக் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஒருவேளை மிகவும் மோசமான பக்க விளைவு ஏற்பட்டால் அது தடுப்பூசியால் தான் ஏற்பட்டது என்று நிரூபிக்கப்படும் பட்சத்தில் பாரத் பயோடெக் நிறுவனம் மூலம் உரிய இழப்பீடு வழங்கப்படும் என்றும் அதிகாரிகள் கூறினர். (நி-4)

## கொரோனா தடுப்பூசி போட்ட 23 பேர் உயிரிழப்பு

(ஒஸ்லோ)

பைசர்நிறுவனத்தின்கொரோனாத் தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களில் 23 பேர் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஐரோப்பிய நாடான நோர்வேயில் கடந்த மாதம் இறுதி முதல் அமெரிக்க நிறுவனமான பைசர்நிறுவனத்தின்கொரோனாத் தடுப்பூசி மக்கள் பயன் பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

நோர்வேயில் இதுவரை 33 ஆயிரத்திற்கு அதிகமானோருக்கு பைசர் நிறுவன கொரோனாத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக முன்கள பணியாளர்களுக்கும், வயதானோருக்கும் கொரோனாத் தடுப் பூசிபோடப்பட்டு வருகிறது.

இந்நிலையில், நோர்வேயில் கொரோனாத் தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களில் 23 பேர் உயிழந்துள்ளனர்.

தடுப்பூசிபோட்டுக்கொண்ட குறுகிய காலத்திற்குள் இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. 23 பேரில் 13 பேர் தடுப்பூசியால் ஏற்பட்ட பக்கவிளைவுகளால் உயிரிழந்திருப்பது தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து பைசர் தடுப்பூசியை கவனமாக பயன்படுத்த நோர்வே அரசு அறிவுறுத்தியுள்ளது. வயதானவர்களுக்கு இந்த தடுப்பூசியைச் செலுத்துவதை குறைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பைசர் தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களில் 23 பேர் உயிரிழந்த சம்பவத்தை தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளில் பைசர் தடுப்பூசியின் விநியோகத்தை அந்நிறுவனம் குறைத்துள்ளது. (நி- 4)

## மின்கம்பத்தில் மோதி பேருந்து விபத்து

## 6 பேர் உயிரிழப்பு, 17 பேர் படுகாயம்

(டில்லி)

ராஜஸ்தான் மாநிலத்தில் மின்கம்பத்தில் மோதி பேருந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த ஆறு பேர் உயிரிழந்துள்ளனர்.

ஜாலோர் மாவட்டத்தில் மகேஷ்பூர் என்ற இடத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இந்த கோர விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் பேருந்தின் ஓட்டுநர், நடத்துநர் இருவரும் உயிரிழந்துள்ளனர். படுகாயம் அடைந்து மீட்கப்பட்ட பயணிகளில் நால்வர் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். படுகாயம் அடைந்த 17 பேர் மேல் சிகிச்சைக்காக ஜோத்பூர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இந்த கோர விபத்து குறித்து பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டுள்ளனர். (நி-4)

## நீதிபதிகள் சுட்டுக்கொலை

(காபூல்)

காபூலில் நேற்றுக்காலை துப்பாக்கி ஏந்தியவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஆப்கான் உயர் நீதிமன்றின் இரு பெண் நீதிபதிகள் உயிரிழந்துள்ளனர்.

இரு நீதிபதிகளும் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நீதிமன்ற வாகனத்தில் தங்கள் அலுவலகத்திற்கு சென்றுகொண்டிருந்தபோது இந்த தாக்குதல் நடந்துள்ளதாக நீதிமன்ற செய்தித் தொடர்பாளர் அஹ்மத் பாஹிம் கவீம் தெரிவித்தார்.

அண்மைய மாதங்களில் ஆப்கானிஸ்தான் முழுவதும் வன்முறை அதிகரித்துள்ளது. குறிப்பாக காபூலில், உயர்மட்ட நபர்களைக் குறிவைத்து கொலை செய்யும் புதிய போக்கு அச்சத்தையும் குழப்பத்தையும் விதைத்துள்ளது. (நி-4)

## கொரோனா அச்சத்தின் மத்தியிலும் சாதனை படைக்கும் 'மாஸ்டர்' திரைப்படம்



(சென்னை)

இளைய தளபதி விஜய் நடிப்பில் பொங்கல் வெளியீடாக வெளிவந்து வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் "மாஸ்டர்" திரைப்படம் முதல் மூன்று நாட்களில் மாத்திரம் 100 கோடி இந்திய ரூபா வசூல் செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொரோனாத் தொற்று காரணமாக மூடப்பட்டிருந்த திரையரங்குகள் 50 வீதமான இருக்கைகளுடன் மட்டுப்படுத்தப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் விஜயின் மாஸ்டர் திரைப்படத்திற்கு கூட்டம் நிரம்பி வழிகிறது.

தொடர்ச்சியாக பல நாட்களுக்கு முன்பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் முதல் நாளில் தமிழகத்தில் மட்டும் 25 கோடி இந்திய ரூபாய் வசூல் செய்ததாக, தயாரிப்பு நிறுவனமான எக்ஸ்பி பிலிம் கிரியேட்டர்ஸ் தெரிவித்தது.

இந்நிலையில் முதல் 3 நாளில் மாஸ்டர் திரைப்படம் 100 கோடி இந்திய ரூபாய் வசூல் செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## ஆறாவது தடவையாக ஜனாதிபதி ஆகிறார் முசவேனி

(உகண்டா)

35 ஆண்டுகளாக உகண்டாவில் ஆட்சியில் இருந்த 76 வயதுடைய யோவரி முசவேனி ஆறாவது முறையாக ஜனாதிபதியாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1986 முதல் நாட்டின் தலைவரான யோவரி முசவேனி நேற்று முன்தினம் 58.64% வாக்குகளைப் பெற்று ஆறாவது முறையாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார் எனத் தேர்தல் ஆணைக்குழு அறிவித்தது.

57.22% வாக்குப்பதிவு இடம்பெற்ற இந்தத் தேர்தலில் அவரை எதிர்த்து போட்டியிட்ட போபி ஒயின் 34.83% வாக்குகளைப் பெற்றார் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அரசியல் மாற்றத்திற்கான உகண்டா மக்களை அணிதிரட்டிய 38 வயதான சட்டமன்ற உறுப்பினர் ஒயின், தேர்தல் முடிவுகளை மோசடி என தெரிவித்துள்ளார்.

இது இராணுவம் மற்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட ஒரு தேர்தல் என்றும் இது முசவேனி ஆட்சி எவ்வளவு சர்வாதிகாரமானது என்பதை மேலும் அம்பலப்படுத்துகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-4)

# சட்டவிரோத பறவைகள் விற்பனை வனவிலங்கு அதிகாரிகளால் மூவர் கைது

(அக்குறணை)

அக்குறணை பிரதேசத்தில் நீண்ட காலமாக சட்டவிரோதமாக நடத்தப்பட்டு வந்த பறவைகளை விற்கும் வர்த்தகம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது மூன்று சந்தேக நபர்கள் வனவிலங்கு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வனவிலங்கு அதிகாரிகளுக்கு கிடைத்த அவசர அழைப்பின் படி அக்குறணை பிரதேசத்தில் உள்ள மூன்று வர்த்தக நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த பறவைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதன்போது 53 கிளிகளும் 5 நெல் குருவிகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த சந்தேக நபர்கள் நீண்டகாலமாக இந்தப் பறவைகளை அநுராதபுர மாவட்டத்தில் தோணிகள எனும் பிரதேசத்தில் ஒரு பறவையை 750 ரூபாவிற்கு வாங்கி 1800 ரூபாவிற்கு விற்று வந்துள்ளதாக விசாரணையின் போது தெரிய வந்துள்ளது. அத்துடன் அக்குறணை பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்களிலிருந்து வனவிலங்கு அதிகாரிகள் கைப்பற்றிய பறவைகளைப் பொறுப்பேற்றுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

# ஆயிரம் ரூபாய் சம்பள விவகாரம் கறுப்புப் பட்டி அணிந்து போராட்டம்

(ஹற்றன்)

**பெருந்தோட்ட தொழிலாளர்களின் 1000 ரூபாய் நாள் சம்பளத்துக்கு உரிய தீர்வை உடனடியாக வழங்குமாறு வலியுறுத்தி, கறுப்புப் பட்டியணிந்து ஹற்றனில் போராட்டமொன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப் பட்டது.**



பெருந்தோட்ட தொழிலாளர் வேதன உரிமைக்கான இயக்கம் முன்னெடுத்து வரும் நாளாந்த அடிப்படை சம்பளம் மற்றும் மாதத்தில் 25 நாள் வேலை கோரிக்கைக்கான தொடர் போராட்டத்தில் மலையகத்தில் உள்ள பல்வேறு சிவில் அமைப்புகளும் நேற்று ஹற்றன்-மல்லியப்பு சந்தியில் நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவு வழங்கியிருந்தன.

மேற்படி போராட்டத்தினை மலையக சிவில் அமைப்புகளின் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்ததுடன், போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கறுப்புப் பட்டியை தலையில் அணிந்திருந்ததுடன் பதாகைகளை ஏந்தி கோஷமிட்டு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தொழிலாளர்களின் இந்த நியாயமான கோரிக்கையை முதலாளிமார் சம்மேளனம் பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் இதை தொழிலாளர்கள் சார்பில் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தது டன், அரசாங்கம் உறுதியளித்தபடி தோட்ட தொழிலாளர்களின் அடிப்படை நாள் சம்பளத்தினை 1000 ரூபாயாக பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் இதை இழுத்தடிப்பு செய்வதற்கு இடமளிக்கக்கூடாது என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இம்மாதம் முடிவதற்குள் தொழிலாளர்களின் சம்பள உயர்வு பேச்சுவார்த்தை முடிவிற்கு கொண்டுவரப்பட வேண்டும் எனவும் மாறாக இழுத்தடிப்பு செய்யும் பட்சத்தில் கடந்த காலங்களை போல் ஏமாற்றம் செய்யாது குறிப்பிட்ட காலத்திற்கான நிலுவை பணத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் இந்த நியாயமான கோரிக்கை நிறைவேறாத பட்சத்தில் தொடர் போராட்டத்தை முன்னெடுக்கவிருப்பதாகவும் மலையகத்தில் உள்ள ஏனைய பல்வேறு இடங்களிலும் இப்போராட்டத்தினை விஸ்தரிக்கவுள்ளதாகவும் மலையக சிவில் அமைப்புகளின் கூட்டமைப்பின் தலைவர் எஸ்.டி.கணேசலிங்கம் தெரிவித்தார். (நி-4)

# இலங்கை தொழிலாளர்களுக்கு குவைத் அரசு அனுமதி

(கொழும்பு)

தொழிலாளர் ஏற்றுமதி நாடுகளான இலங்கை, பிலிப்பைன்ஸ், இந்தியா மற்றும் ஏனைய இடங்களில் இருந்து புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உள்நாட்டு உதவியாளர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் நாட்டிற்குள் பிரவேசிக்க குவைத் அரசு அனுமதி அளித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக குவைத் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

தமது நாட்டிற்கு வரும் வீட்டுத் தொழிலாளர்கள் தங்கள் நாடுகளால் அங்கீகாரம் பெற்ற ஒரு ஆய்வகத்திலிருந்து ஒரு ஆவணத்தை வைத்திருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குவைத்துக்கு வரும் பயணிகள் மீண்டும் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் சோதனைகளின் முடிவுகள் எதிர்மறையாக இருந்தால், சுகாதாரத் தேவைகளுக்கு ஏற்ப 14 நாட்கள் தனிமைப்படுத்தலுக்காக நேரடியாக நியமிக்கப்பட்ட இடங்களுக்கு மாற்றப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14 நாட்கள் தனிமைப்படுத்தலின் முடிவில் தொழிலாளர்கள் மூன்றாவது பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் அதன்பின்னர் முடிவுகள் எதிர்மறையாக இருந்தால் அவர்களின் ஆதரவாளர்களின் வீடுகளுக்குச் செல்லலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், நேர்மறையான முடிவுகளைப் பெறுபவர்களை ஏனைய தனிமைப்படுத்தப்பட்ட வசதிகளுக்கு மாற்றுவதற்கு சுகாதார அமைச்சகம் பொறுப்பேற்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# கிழக்கு முனையத்துக்கான யோசனை திட்டத்தினை சமர்ப்பிப்பதற்கு தொழிற்சங்கங்களுக்கு காலக்கெடு

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் முழுமையான உரித்தையும் இலங்கையே கொண்டிருக்க வேண்டும் என்றும் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் கீழ் உள்நாட்டு முதலீட்டாளர்களின் பங்கேற்புடன் அபிவிருத்திகளைச் செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தி வரும் தொழிற்சங்கங்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக அதற்கான யோசனைகள் அடங்கிய திட்டத்தினை கையளிக்குமாறு காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது.



கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் அமைச்சின் அதிகாரிகள், துறைமுக அதிகார சபையின் அதிகாரிகள் மற்றும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கான நியமிக்கப்பட்ட குழுவின் அங்கத்தவர்கள் ஆகியோருக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அமைச்சின் செயலாளர் யு.டி.சி.ஜெயலால் அதிகாரசபையின் தலைவர் ஜெனரல் தயா ரட்நாயக்க ஆகியோர் பங்கேற்ற கலந்துரையாடலே நேற்று முன்தினம் நடைபெற்றிருந்தது.

இந்தக் கலந்துரையாடலின் போது தொழிற்சங்கத்தரப்பில், ஏற்கனவே ஜனாதிபதி முன்னிலையில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையான கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் ஒரு சதவீத பங்கையும் வெளிநாடுகளுக்கு வழங்கக் கூடாது.

அதனுடைய பூரணமான முகாமை துறைமுக அதிகர சபையின் கீழ் இருக்க வேண்டும். அத்துடன் உள்நாட்டு முதலீட்டாளர்களின் பங்களிப்பில் அதன் அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

எனினும் இந்த விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சரவை குழுவொன்றை நியமித்துள்ள நிலையில், அந்தக்குழுவிடத்தில் தொழிற்சங்கங்களின் யோசனைகளை முன்னெடுப்பதற்கான யோசனைத் திட்ட வரைபினை தயாரித்து கையளிக்குமாறு கோரியதாக துறைமுக அதிகார சபையின் தலைவர் ஜெனரல் தயா ரட்நாயக்க ஊடகம் ஒன்றிற்குத் தெரிவித்தார்.

அத்துடன் அந்த யோசனைத் திட்டத்தினைத் தயாரித்து வழங்குவதற்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரையில் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜெனரல் தயா ரட்நாயக்க மேலும் தெரிவித்தார். (நி-4)

# தனியார் பேருந்துகள் பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

காலி-கொழும்பு பிரதான வீதியின் அளுத்கமவில் இருந்து புறப்படும் தூர இடங்களுக்கான தனியார் பேருந்து சேவையாளர்கள் பணிப்புறக்கணிப்பினை முன்னெடுத்துள்ளனர்.

தமது பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்தாது நேற்று அதிகாலை முதல் இந்தப் புறக்கணிப்பினை முன்னெடுத்துள்ளனர்.

குறுகிய தூர பிரதேசங்களுக்கான தரிப்பிடங்களில் தமது பேருந்துகளை நிறுத்துவதற்குத் தடை செய்வதற்கான நடவடிக்கையை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்தே இந்த புறக்கணிப்பினை அவர்கள் முன்னெடுத்ததாகக் கூறப்படுகிறது. (நி-4)

# இராஜகிரியவில் மண்சரிவு

## இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

இராஜகிரிய - கலபலுவாவ - அக்கொன வீதியில் கட்டடமொன்றின் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இடத்திற்கு அண்மையில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி இருவர் உயிரிழந்துள்ளனர்.

நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டு வந்த இருவரே நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

இதில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதுடன், மற்றையவரின் சடலத்தை மீட்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (நி-4)

# பாராளுமன்ற ஊழியர்கள் நால்வருக்கு தொற்று உறுதி



(கொழும்பு)

பாராளுமன்றத்தில் சேவையாற்றும் ஊழியர்கள் நால்வருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகளில் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் 31 பேரும் பணியாளர்கள் பலரும் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் பாராளுமன்றில் சகலரும் பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்க வேண்டும் என சபாநாயகர் வலியுறுத்தியிருந்தார்.

அதற்கமைய கடந்த வியாழக்கிழமை பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பணியாட்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அந்தவகையில், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள், பணியாளர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

மேலும் 15 பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பணியாட்கள் 463 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில், எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

எனினும், பாராளுமன்ற பணியாளர்களுடன் பாராளுமன்ற பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட 448 பேர் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவர்களில் ஐவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று பாராளுமன்ற ஊழியர்கள் நால்வருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# தலதா மாளிகை பொலிஸ் அதிகாரிகளுக்கு தொற்று

(கொழும்பு)

தலதா மாளிகை வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள பொலிஸ் நிலைய அதிகாரிகள் நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் குறித்த நிலையத்தில் கடமையாற்றும் சுமார் 200 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பொலிஸ் நிலையத்தில் கடமைகளுக்காக வேறு பொலிஸ் அதிகாரிகள் 180 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி-4)

## கொரோனா தடுப்பூசி

# இலவசமாக வழங்க நடவடிக்கை



(கொழும்பு)

ஒக்ஸ்போர்ட் -அஸ்ட்ராஜெனெகா கொரோனா தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஆரம்ப சுகாதார பராமரிப்பு, தொற்றுநோய் மற்றும் கொவிட்-19 நோய்க் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர், விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இந்த தடுப்பூசியை அடுத்த மாதம் நடுப்பகுதி முதல் நாட்டு மக்களுக்கு வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கொரோனா தடுப்பூசியை மக்களுக்கு இலவசமாக வழங்கவுள்ளதாகவும் விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே கூறியுள்ளார். (நி-4)





பாபு




அனிதா




கயல்




பீற்றர்




வைஷாலி




மாறன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வெட்டுப்புள்ளிகள் வெளியிடும் முறையில் வெளிப்படைத்தன்மை அவசியம்- பந்துல

(கொழும்பு)

**புலமைப்பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்ட முறை என்னவென்பது தொடர்பில் கல்வி அதிகாரிகள் உடனடியாக விளக்கமளிக்க வேண்டும் என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**



2020 ஆம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளிகள் தொடர்பில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரபலபாடசாலைகளை வகைப்படுத்தி வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்படும் முறையில் எவ்வித வெளிப்படைத் தன்மையும் இல்லை எனவும் நீண்டகாலமாக வெட்டுப் புள்ளி எதனை அடிப்படையாக கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது என்பது சிக்கலாக இருப்பதாகவும் பந்துல தெரிவித்தார். (நி-4)

# நாணயக்காரவின் பணியாளர்களுக்கு தொற்றில்லை

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுறுதியான நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் செயலாளர் மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் ஊழியர்களுக்கு அண்மையில் பி. சி. ஆர். பரிசோதனை செய்யப்பட்டது.

அந்தப் பரிசோதனையின் முடிவுகளின் படி நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் செயலாளர் மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்றுறுதி செய்யப்படவில்லை என நீர்வழங்கல் அமைச்சு அறிவித்துள்ளது.

மாகாண பிரதிநிதிகளும் தன்னார்வமாக பி.சி.ஆர். பரிசோதனையை செய்து கொண்டதுடன் அவர்களுக்கும் கொரோனாத் தொற்றுறுதி இல்லையென உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதன்படி சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்கள்படி அமைச்சரவையின் பணிகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது. (நி-4)

# ஐ.தே.க.அதிகாரிகள் பதவியேற்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிகளுக்கு அண்மையில் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழு எதிர்வரும் வியாழக்கிழமை தங்களது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளது.

அன்றுமுதல் கட்சியை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான நடவடிக்கையை மேலும் விரிவுபடுத்த உள்ளதாகக் கட்சியின் புதிய செயலாளர் பாலித ரங்கே பண்டார ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவை வழிநடத்தல் மையமாக அன்றைய தினம் பெயரிட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் முக்கிய பதவி நிலைகளுக்கான நியமனங்களை மேற்கொள்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கடந்த 13ஆம் திகதி கட்சித் தலைமையகமான சிறி கொத்தாவில் கூடியமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# 1500 கிலோ மஞ்சளுடன் கைது

(கொழும்பு)



சட்ட விரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட 1559 கிலோ கிராம் மஞ்சளுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் கண்டி மடவளை மற்றும் வத்தளை மாபொல பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

நேற்று பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் தெமட்டகொடை- பேஸ்லைன் வீதியில் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. மஞ்சள் பொதி, போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்ட லொறியுடன் சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக தெமட்டகொடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தேர்வு எழுதுவது எப்படி?

இந்தக் காலத்துப் பையன் எதற்கும் பயப்பட மாட்டான். ஆனால் ஒரு விடயத்திற்குப் பயப்படுவான். என்ன அது?

பரீட்சை தான். வேறு என்ன? தேர்வு நெருங்க பரீட்சை ஜுரமே வந்துவிடும் சில பேருக்கு. படிக்காமல் இருந்தால் தான் பரீட்சை பயமுறுத்தும். ஆரம்பத்தில் இருந்தே நல்லா படித்துக் கொண்டு வந்தால் கடைசி நேரத்தில் பரீட்சையைக் கண்டு பயப்பட வேண்டிய அவசியமே இருக்காது. சரி... இப்பொழுது பரீட்சை வந்துவிட்டது. அதை நல்லவிதமாக எழுதுவது எப்படி? அதற்குச் சில ஆலோசனை சொல்லியிருக்கின்றார்கள் பெரியவர்கள். படிக்கிற பிள்ளைகள் இதைக் காதிலே வாங்கி வைத்துக் கொள்வது நல்லது.

10 மணிக்கு பரீட்சை ஆரம்பம் என்றால் 8 மணிக்கே எல்லா பாடங்களையும் ஒரு தடவை புரட்டிப் பார்த்துக் கொள்வது நல்லது.

பரீட்சை எழுத பள்ளிக் கூடம் புறப்படுகின்றீர்கள். அப்பொழுது உங்களுக்கு வீட்டில் யார்மேல் மிகப் பிரியமோ அல்லது யாருக்கு உங்கள் மேல் மிகப் பிரியமோ அவர்களிடம் சொல்லிக் கொண்டு புறப்படுங்கள். அரை மணி நேரத்திற்கு முன்னால் அங்கே போய் இருங்கள். கடைசி நேரத்தில் அரக்கப் பரக்க ஓடி.. இடத்தைத் தேடி நம்பரைத் தேடி அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்காதீர்கள்.

பரீட்சை எழுதுவதற்கு முன்னால் வெளியே நின்று கொண்டிருக்கின்ற ஏனைய பையன்களிடம் பாடத்தைப் பற்றி சந்தேகம் கேட்டுக் கொண்டிருக்காதீர்கள். சில சமயம் அது குழப்பமாகப் போய்விடும். உங்களுக்குத் தெரிந்தது உங்களோடு இருக்கட்டும். அவர்களுக்குத் தெரிந்தது அவர்களோடு இருக்கட்டும்.பத்து நிமிடத்திற்கு முன்னாடியே தேர்வு அறைக்குள்ளே நுழைந்துவிடுங்கள். தெரிந்தோ தெரியாமலோ உங்கள் சட்டைப் பைக்குள்ளே ஏதாவது காகிதத் துண்டு இருந்தால் தூக்கிப் போட்டுவிடுங்கள்.அது என்னத்திற்கு.

மணியடிக்கிறதிற்கு முன்னால் வேணும் என்றால் அறையை சுற்றி நோட்டம் விடலாம்.. யார் யார் எங்கே இருக்கின்றார்கள் என்று பார்க்கலாம். மணியடித்ததன் பின்பு சுந்தரம் எங்கே இருக்கின்றான்..சோமு எங்கே உட்கார்ந்திருக்கின்றான் என்று பார்த்துக் கொண்டிருந்தீர்கள் என்றால் நேரம் வேஸ்ட். நிதானமாக ஒரு தடவை கண்ணை மூடிக்கொண்டு படித்ததை நினைத்துப் பாருங்கள்.விடைத்தாள் கொடுத்தவுடன் அதைக் கவனமாக பூர்த்தி செய்வார்கள். உங்கள் நம்பரை உரிய இடத்தில் எழுதுங்கள்.தேர்வாளர் கையொப்பம் விடைத்தாளிலே இருக்கா என்று உறுதிப் படுத்திக் கொள்ளுங்கள்.

வினாத்தாள் கொடுத்தவுடனே..நிதானமாக அதிலே உள்ள குறிப்புக்களை படியுங்கள்.எத்தனை கேள்விக்குப் பதில் எழுதச் சொல்லியிருக்கின்றார்கள்.எத்தனை கேள்விக்குப் பதில் தெரியும்..என்று முடிவு செய்து கொள்ளுங்கள். தெரியாத கேள்வியைப் பற்றி மனதை அலட்டிக் கொள்ள வேண்டாம்.எந்தக் கேள்விக்கு நல்லா பதில் எழுதத் தெரியுமா அந்தக் கேள்விக்கு முதலில் பதில் எழுதுங்கள்..முதல் இரண்டு மூன்று பக்கம் கொஞ்சம் நிறுத்தி நிதானமாக அழகாக எழுதுங்கள்..அதன்பின்பு நேரத்திற்குத் தகுந்த மாதிரி பார்த்துக் கொள்ளுங்கள்.

எழுதி முடித்ததும் அந்தக் கேள்வியிலே டிக்மார்க் செய்து கொள்ளுங்கள். இந்தக் கேள்விக்கு இவ்வளவு நேரம் என்று ஒதுக்கி அந்த நேரத்திலே பதில் எழுத வேண்டும்.கேள்விக்குத் தகுந்த பதில் போதும். உங்களுக்கு நிறைய தெரியும் என்பதால் தெரிந்ததையெல்லாம் வளவள என்று எழுதிக் கொண்டிருக்கக் கூடாது.பதில் எழுதும்போது தொடர்ச்சியாக எழுதிக் கொண்டே போகக் கூடாது. சின்ன சின்னப் பந்தியாகப் பிரித்து எழுத வேண்டும். தாராளமாக மார்ஜின் விட வேண்டும்.ஒரே கேள்விக்கு இரண்டு இடத்திலே பதில் எழுதக் கூடாது. இப்படிச் சில பேர் எழுதுவது உண்டு.திருத்துபவர்கள் ஏமாந்து போய் மார்க் போட்டுவிடுவார்கள் என்று நினைத்துக் கொண்டு.அப்படியெல்லாம் ஏமாற மாட்டார்கள். அதிகப்படியான விடைத்தாள்கள்( Additional Sheets) வாங்குகின்ற பொழுது உங்கள் நம்பர்,பக்கமெல்லாம் சரியாக போட வேண்டும். தேர்வாளர் கையொப்பம் எல்லா இணைத்தாள்களிலேயும் இருக்கின்றதா என்று சரி பார்க்க வேண்டும்.

முதலில் தெரிந்த கேள்விக்கெல்லாம் பதில் எழுதிவிடுங்கள். பின்பு தெரியாத கேள்வியாக இருந்தாலும். உங்களுக்குத் தெரிந்த அளவுக்குப் பதில் எழுதுங்கள். அதை விட்டுவிட வேண்டாம்.எல்லாம் எழுதி முடித்ததன் பின்பு கடைசியாக் ஒரு தரம் சரி பாருங்கள். கால்புள்ளி அரைப்புள்ளி விடுபட்டிருந்தால் அதையெல்லாம் வைக்கலாம்.

கேள்வி நம்பர்- பக்கம் நம்பர் எல்லாம் சரியாக இருக்கா என்று பார்த்துக் கொள்ளுங்கள். மணியடித்ததும் நிதானமாக விடைத்தாளைக் கொடுத்துவிட்டு வெளியிலே வாருங்கள். வீட்டுக்குப் போனவுடனே அடுத்த பரீட்சைக்கான புத்தகங்களை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்துவிடாதீர்கள்.

ஒரு மணி நேரமாவது ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். அதன்பின்பு அடுத்த பரீட்சைக்குப் படிக்கலாம். ஒரு பரீட்சையில் நிறைய மார்க் வாங்கின இரண்டு பையன்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒருத்தன் சொன்னான்.

வீட்டிலே படிக்கின்ற பொழுது எனக்கு ஏதாவது பாடத்திலே சந்தேகம் வந்தால் உடனே எங்கள் அப்பாவைக் கேட்டுத் தெரிந்து கொள்வேன். அதனாலே தான் அதிக மார்க் வாங்க முடிந்தது என்றான்.அதற்கு இவன் எனக்கு பாடத்திலே சந்தேகம் வந்தால் உடனே எங்கள் அப்பாவிடம் கேட்கமாட்டேன். அதனால் தான் அதிக மார்க் வாங்க முடிந்தது என்கின்றான்.

# நாடுகளின் ஆட்புல எல்லைகளும் இலங்கையின் எல்லையோரக் கடல் எல்லை நிர்ணயமும்

13

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



வங்காள விரிகுடாவில் தென் பகுதி பற்றிய பரிந்துரைகளைத் தயாரிக்கும்போது கண்டத்திட்டு வரம்புகள் குறித்த ஆணையத்திடம் அக் கூற்றின் ஏற்பாடுகளிற்கு அமைய தீர்மானங்கள் அமைய வேண்டும் என **UNCLOSE** கேட்டுக்கொண்டது. அக் கூற்றானது கடற்கரைக்கு அப்பால் 200 மீற்றர் சம ஆழக்கோடு அமையும் பகுதியில் 20 கடல்மைலுக்குள் அமைந்திருக்கும் கண்ட எல்லை வரை அமையக்கூடியதாக உள்ள பகுதியோடு தொடர்பானது. மேலும் இக் கூற்று **UNCLOSE** ன் உறுப்புரை 76ன் பந்தி 4 **(a)** ஐ பிரயோகிக்கும் பொழுது சட்டரீதியான கண்டத்திட்டின் எல்லையின் பாதிப் பகுதியை விட அதிகமாக விலகிவிடுவதனால் சமநிலை இல்லாது போகும் என எடுத்துக்காட்டியது. எனவே ஒவ்வொரு அடையல்களின் தடிப்பும் 1 **km** க்குக் குறையாத அளவில் இருக்கையில் நிலையான புள்ளிகளுடன் இணைக்கப்பட்ட நீளம் , 60 கடல்மைல்களுக்கு விஞ்சாத எல்லைக்கோட்டின் புறவிளிம்பு நேர்கோடுகளால் நிறுவப்படலாம் என்பதை அம் மகாநாடு ஏற்றுக் கொண்டது. மேற்கூறிய கருத்துக்கள் (நிலைமைகள்) இலங்கையின் கண்டத்து எல்லைகளுக்கு ஏற்றதாய் உள்ளன.


**இலங்கை தனது வெளிப்புற கண்டத்திட்டிற்கான கோரிக்கையை கவனத்தில் எடுப்பதற்காக கண்டத்திட்டு வரம்புகள்குறித்த ஆணையத்திடம் சமர்ப்பித்தல்.**

கடற்சட்டத்திற்கான மூன்றாம் ஐக்கிய நாடுகள் மகாநாட்டின் இறுதிச்சட்டத்தின் இணைப்பு IIல் உள்ளடங்கிய புரிந்துணர்விற்கான கூற்றின் 3ம் பந்தியின்படி நிலைப்பட்ட புள்ளிகளை 60 கடல்மைல் நீளத்தை விஞ்சாதநேர்கோடுகளால் இணைத்து இலங்கை தனது கண்டத்து எல்லையின் வெளிப்புற (தளக் கோட்டில் இருந்து 200 கடல் மைல்களுக்கு அப்பால்) விளிம்பை நிறுவியுள்ளது. நிலைப்பட்ட புள்ளி சார்ந்த அடையல் பாறைகளின் தடிப்பு 1kmக்குக் குறையாத இடங்களில் இப் புள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இப்புள்ளிகள் அகலக்கோடு மற்றும் நெடுங்கோடு ஆகியவற்றின் அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றன. 200 கடல்மைல்களுக்கு அப்பால் இலங்கையின் கண்டத்திட்டின் வெளிப்புற வரம்புகளையும்/எல்லையையும் நிலைப்பட்ட புள்ளிகளின் அமைவிடத்தையும் உரு-1 காட்டுகின்றது.

உடன்படிக்கையின் இணைப்பு IIல் உறுப்புரை 3ன் கீழ் தனது கண்டத்திட்டிற்கான கோரிக்கையை கவனத்தில் எடுப்பதற்காக இலங்கை கண்டத்திட்டு வரம்புகள் குறித்த ஆணையத்திடம் **(CLCS)** 2009ம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி சமர்ப்பித்தது.

இதே நேரத்தில் இலங்கையை அண்டியுள்ள நாடுகளான இந்தியா, பங்களாதேஷ் போன்றவை தங்கள் நாட்டின் கண்டத்திட்டுகளுக்கு இலங்கை உரிமைகோருவதாக தெரிவித்துள்ளன. இலங்கை அந்நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியே தீர்வு காண வேண்டும். பங்களாதேஷ் விட்டுக் கொடுப்பதாகத் தெரியவில்லை.

இலங்கை கண்டத்திட்டு வரம்புகள் குறித்த ஆணையத்திடம் சமர்ப்பித்த ஆவணத்திற்கு தனது கருத்துக்கள் மற்றும் வியாக்கியானங்களை கண்டத்திட்டு வரம்புகள் குறித்த ஆணையத்திற்கு தெரிவிக்கவேண்டும். அதற்கு இலங்கைக்கு 2025 ஆம் ஆண்டுக்கு பின்னரே சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது என்று கூறப்படுகிறது. (முற்றும்)




*Y-இலங்கை 200 கடல் மைல் கோடு*
*X- அயல் நாட்டின் 200 கடல்மைல் கோடு*
*Z-இலங்கை / இந்திய கடல் எல்லை 1974/1976*
*AB- 1-60 வரையான நிலையான புள்ளிகளை இணைக்கும் கோடு- இலங்கையின் கண்டத்திட்டு வெ ளிப்புற வரம்பு*



**சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட மட்டுவில் வட்டாரத்தில் உள்ள செல்வவிநாயகர் சனசமூக நிலையத்தால் புதிய கல்வியாண்டினை முன்னிட்டு பாட சாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட் டன. (படம்:- சுபேசன்)**

## சிறைச்சாலையில் 17 பேருக்கு தொற்று உறுதி

(கொழும்பு)

நாட்டின் சிறைச்சாலைகளிலிருந்து மேலும் 17 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 16 ஆண் கைதிகளும், சிறைச் சாலை அதிகாரியொருவருமே இவ்வாறு கொரோனாத் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (நி-4)

## 425 பேர் குணமடைவு

(கொழும்பு)

நாட்டில் மேலும் 425 பேர் கொவிட்-19 தொற்றில் இருந்து குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற் நோய் விஞ்ஞான பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதன்படி, நாட்டில் கொவிட்-19 தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 45 ஆயிரத்து 171 ஆக அதிகரித்துள்ளது. (நி-4)



**தைப்பொங்கலை முன்னிட்டு முதியோர்களுக்கு நா.விஜயகுமாரின் நிதி உதவியுடன் புதிய ஆடைகளும் பொருட்களும் உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத் தலைவர் ப.தர்மகுமாரனால் வழங்கி வைக்கப்பட்டது.**

# மைத்திரிக்கு அழைப்பு விடுத்தார் ஜனாதிபதி கோட்டாபய

(கொழும்பு)

பாடசாலை கட்டடமொன்றைத் திறந்து வைக்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்த ஆச்சரிய சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து பாடசாலை நிகழ்வொன்றில் கலந்துகொண்ட ஜனாதிபதி, அக்கட்டடத்தைத் திறந்து வைக்குமாறு முன்னாள் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்தார்.

பொலநறுவை மெதிரிகிரியவில் இடம்பெற்ற நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய ஜனாதிபதியும் கலந்துகொண்டனர். அந்நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி, மைத்திரிபால சிறிசேனவை நோக்கி "இது கட்டப்படுவதற்கு காரணமாயிருந்த மைத்திரியே இதனை திறந்துவைக்கவேண்டும்" என அழைப்பு விடுத்தார். இதனைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி கட்டடத்தைத் திறந்து வைத்தார். (நி-4)

### சுகாதார விதிமுறை மீறல்
# 29 பேர் கைது

(கொழும்பு)

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் இதுவரையில் 2 ஆயிரத்து 578 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மாத்திரம் குறித்த குற்றச்சாட்டுகளுக்காக 29 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க சுகாதார அதிகாரிகள் வழங்கியுள்ள ஆலோசனைகளைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம்வலியுறுத்தியுள்ளனர்.(நி-4)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி

## வாழ்வை வளமாக்கும் வாகனம்

(தொடர்ச்சி)

பொதுவாக எல்லாப் பழைமையான ஆலயங்களிலும் முதல் நாள் கற்பக விருட்ச வாகனம் வீதி உலா வரும். இந்த மர வாகனம் காத்தல் தொழிலை நமக்கு உணர்த்துகிறது. ஒரு மரத்தின் வேராக இறைவன் இருக்கிறான். இலைகளும் கிளைகளும் தத்துவங்களாக உள்ளன. இந்த வாகனத்தில் வரும் உற்சவரை கண்டு வழிபட்டால் அடியார்களின் வேண்டுதல்களை இறைவன் நிறைவேற்றுவான் என்பது ஐதீகமாகும். அடுத்து சூரிய மற்றும் சந்திர பிரபை வாகனங்களில் இறைவன் வருவார். இதனை விருத்திக்கிரம ஸ்திதிக் கோலம் என்று சொல்வார்கள். விஷ்ணு அலை கடலில் சேஷன் மீது சயனம் கொண்டிருப்பார். இதனால் தான் சேஷ வாகனமும் இடம் பெறும். இந்த வாகனம் இறைவனின் மறைத்தல் தொழிலை உணர்த்துகிறது.

அதாவது பாம்பானது விஷம், ரத்தினம், படம் ஆகியவற்றை மறைத்துக் கொண்டு புற்றுக்குள் மறைந்து வாழும். வேண்டும் பொழுது அது தன்னை வெளிப்படுத்தும். எனவே நாக வாகனமும் முக்கியத்துவம் பெறுகிறது. இந்த வாகனங்களுக்கு இணையான சிறப்பு பூத வாகனம், கைலாச வாகனம் ஆகியவற்றுக்கும் உண்டு.

நாம் இறந்தவுடன் நமது ஆன்மாவை அழைத்துச் செல்வது பூத கணங்கள் தான். எனவே பூத வாகனத்தில் விரத்திக் கிரம சம்கார கோலத்தில் ஈசன் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி அளிப்பதாக ஐதீகம். கைலாச வாகனம் நாம் நம் தவறை உணர்ந்து ஈசனிடம் சரண் அடைந்து விட்டால் அது நம்மை வாழ்வில் மேன்மைப்படுத்தும் என்பதை உணர்த்தும் வாகனமாகும். ஈசன் உறைந்துள்ள கயிலாய மலையை ஒருதடவை ராவணன் ஆணவம் கொண்டு தூக்க முயன்றான்.

அப்போது ஈசன் பெருவிரல் பட்டு துடித்தான். அதன் பிறகே ஆணவம் நீங்கி அவன் ஈசன் அருள் பெற்றான். எனவே கைலாச வாகனத்தைக் கண்டால் நமக்கு ஆணவம் அகன்று ஈசன் அருளைப் பெற முடியும். வாகன அணி வகுப்பில் யானை வாகனம் பிரமிப்பானதாக இருக்கும். உலகப் பொருட்கள் அனைத்தும் யானைக்குள் அடங்குவதாக இந்த வாகனம் நமக்குச் சொல்கிறது. இந்த வாகனம் இறைவனின் ஐந்தொழிலையும் நமக்கு உணர்த்துகிறது. குதிரை வாகனம் சம்காரத் தொழிலையும் காட்டுகிறது. குதிரையின் கால்களாக தர்மம், அதர்மம், காமம், மோட்சம் உள்ளன. காதுகளாக கிரியை, ஞானம் இருக்கின்றன. பரஞானம், அபரஞானம் கண்களாக உருவகப் படுத்தப்பட்டுள்ளன. குதிரை முகம் விதியாகவும் மந்திரங்கள் ஆபரணங்களாகவும் வால் ஆகமங்களாகவும் கடிவாளம், மகா பிரணவ மந்திரமாகவும் சேணம் உபநிஷதமாகவும் உள்ளன. இதனால் வாகனங்களில் குதிரை வாகனம் தனித்துவம் கொண்டது. மயில் வாகனம், அன்ன வாகனம் ஆகியவையும் வீதி உலா வரும்பொது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

இந்த வாகனங்களை வழிபட்டால் சூரியன் போன்ற பிரகாச வாழ்வையும் சந்திரன் போன்ற குளிர்ச்சியையும் இறைவன் நமக்கு தருவார் என்று அர்த்தமாகும். இந்த வாகன வீதி உலாக்கள் சிறப்புற நடைபெற வேண்டும் என்பதற்காக அண்மைக் காலமாக ஆலயங்களில் வாகனங்களை பராமரிப்பது முக்கியத்துவம் பெற்றுள்ளது. பெரும்பாலான ஆலயங்களில் வாகனங்கள் வைத்திருப்பதற்கு ஒதுக்கியுள்ளனர்.

இந்த வாகனங்கள் உற்சவரை சுமந்து கொண்டு வீதி உலா வரும் போது மகத்துவங்கள் நிறைந்த தன்மையை பெறுகின்றன என்பதை மறந்து விடாதீர்கள். இந்த வாகனங்களை அவசியம் வழிபட வேண்டும்.

ஒவ்வொரு வாகனத்தையும் வழிபட ஒவ்வொரு வித பலன் கிடைக்கும். இந்த வாகனங்களில் கருட வாகனம் தமிழ் நாடு முழுவதும் மிகவும் புகழ் பெற்று திகழ்கிறது. கருட வாகனத்தின் சிறப்பு கருதி அதை கருட சேவை என்பார்கள். கருடனுக்கு மட்டும் ஏன் இவ்வளவு சிறப்பு? அதன் பின்னணியில் உள்ள அம்சங்கள் குறித்து அடுத்துப் பார்க்கலாம். (முற்றும்)

# செய்தித்துளிகள்

## ஹெரோயினுடன் பெண் கைது

(கொழும்பு)

பொறளை-வனாத்தவில்லு பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து 1.638 கிலோ கிராம் ஹெரோயின் ரக போதைப் பொருள், ஆறு இலட்சத்து பத்தாயிரம் பணம் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (நி-4)

## அறநெறிப் பாடசாலைகள் ஆரம்பமானது

(கொழும்பு)

மேல்மாகாணத்தைத் தவிர நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள அறநெறிப் பாடசாலைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டன.

பௌத்த, இந்து மற்றும் ஏனைய மதங்களைப் போதிக்கின்ற அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சு அனுமதி அளித்துள்ளது.

இந்த நிலையில் மேல்மாகாணம் மற்றும் தனிமைப் படுத்தப்பட்டுள்ள பகுதிகளை தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ள அறநெறி பாடசாலைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இந்த பாடசாலைகளில் உரிய சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என சுகாதார சேவைகள் பணியகம் அறிவித்துள்ளது.

இதற்கான அறிவுறுத்தல்கள் அனைத்து அறநெறி பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## 288 பேர் நாடு திரும்பினர்



(கொழும்பு)

தொழிலுக்காக ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு சென்றிருந்த 288 இலங்கையர்கள் நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

விசேட விமானம் மூலம் குறித்த 288 பேரும் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் அவர்கள் அனைவரிடமும் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (நி-4)

## தனிமைப்படுத்தலில் இருந்து சில பகுதிகள் விடுவிப்பு

(கொழும்பு)

நாட்டின் சில பகுதிகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தலில் இருந்து நீக்கப்படுவதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.


ஊடகமொன்றில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்படி களுத்துறை - இந்துவர பகுதியின் துன்துவ கிழக்கு மற்றும் மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப்படுத்தலில் இருந்து நீக்கப்படுவதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன் இதுவரையில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள பேருவளை பகுதியில் 9 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் பாணந்துறை பகுதியில் ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவும் களுத்துறை பகுதியில் 20 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் நேற்று தனிமைப்படுத்தலில் இருந்து நீக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-4)




# சிங்கமும் கரடியும் குள்ளநரியும்



அது ஒரு கோடை காலம். அந்த காட்டில் வாழ்ந்த விலங்குகள் அனைத்தும் அந்தக் காட்டை விட்டு வேறு ஒரு காட்டுக்கு சென்று விட்டன.

இதனால் காட்டிலுள்ள மற்ற வில்ங்குகளுக்கு உணவு பஞ்சம் ஏற்பட்டது.

அந்த காட்டில் வாழ்ந்த சிங்கமும் கரடியும் ஒரு ஒப்பந்தம் செய்தன. சிங்கம் கரடியிடம், "நாம் இருவரும் ஒன்றாக வேட்டையாடி இரையை சமமாக பிரித்துக் கொள்வோமா?" என்றது. கரடியும் சம்மதம் தெரிவித்தது.

ஒருநாள் சிங்கமும் கரடியும் வேட்டைக்குச் செல்லும்போது, வழி தவறிய கால் உடைந்த மான் குட்டி ஒன்று வழியில் அமர்ந்திருப்பதைப் பார்த்தன.

சிங்கத்திற்கும் கரடிக்கும் அளவற்ற மகிழ்ச்சி. ஏனெனில் சிங்கமும் கரடியும் உணவு சாப்பிட்டு 2 நாட்கள் ஆகிவிட்டது.

சிங்கமோ அந்த மானின் வயிற்றுப்பகுதி எனக்கு தான் என்றது. கரடியோ "இல்லை இல்லை அதன் வயிற்றுப்பகுதி எனக்கு தான்" என்றது.

மானைப் பங்கு போடுவதில் சிங்கமும் கரடியும் பயங்கரமாகச் சண்டை செய்தன. வெகுநேரம் சண்டை செய்ததால் இரண்டும் களைப்படைந்து விட்டன.

அதனால் இரண்டும் தரையில் சாய்ந்தன. அந்த சமயம் வெகுதூரத்திலிருந்தே இவர்களின் சண்டையைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு குள்ளநரி ஓடி வந்தது.

அங்கிருந்த மானைத் தூக்கிக் கொண்டு ஓடிவிட்டது. சிங்கமும் கரடியும் ஒன்றும் செய்ய முடியாமல் அதனைப் பார்த்தபடி கீழே தரையில் கிடந்தன.

இவை இரண்டும் வேட்டையில் கிடைத்ததை நல்ல முறையில் பங்கு போட்டுக் கொள்ளாமல் வீணாகச்சண்டை போட்டு இரையை இழந்தோமே என்று வருத்தப்பட்டன.

**நீதி: வீண் சண்டை என்றும் இரு தரப்பினருக்கும் தீமையாகும்.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## இதயம் கவர்ந்த இஸ்ஸஸ் யுத்தம்




வணக்கம், டேரியஸ் நலமாக இருக்கிறார். நீங்கள் எல்லோரும் எப்படி இருக்கிறீர்கள்? அவர் உயிரோடு இருக்கிறாரா? எங்கு இருக்கிறார்? டேரியஸின் மனைவியின் கண்களில் ஆச்சரியக் கண்ணீர்.

அதைத்தான் நாங்களும் தேடிக்கொண்டிருக்கிறோம். அலெக்சாண்டரின் முகத்தில் புன்னகை. எங்கள் எதிர்காலம்? டேரியஸின் தாய் வருத்தத்தோடு கேட்டாள்.

கவலையே வேண்டாம். மன்னர் டேரியஸிடம் இருந்தபோது எப்படி வசதியாக வாழ்ந்தீர்களோ அதில் கொஞ்சமும் குறைவில்லாமல் வாழ்வதற்குத் தேவையான எல்லா வசதிகளையும் நான் அளிக்கின்றேன்.

நன்றி அரசே. தங்களுடை மகள்களுக்கு எந்தவிதமான பாதுகாப்புக் குறைபாடுகளும் இருக்காது. மிக்க நன்றி அரசே.

வெற்றிக்களிப்பில் இருந்தார் மன்னர் அலெக்சாண்டர். தான் வெற்றி கொண்ட பகுதிகளையெல்லாம் சுற்றிப் பார்க்க விரும்பினார். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

உடனடியாக பாரசீக நாட்டு சாத்திர வல்லுநர்கள், அறிவியல் மேதைகள், வரலாற்று ஆய்வாளர்களை அழைத்து வாருங்கள்.

உத்தரவு வந்ததும் அதற்கான பணிகள் தொடங்கின. எல்லோரும் வரவழைக்கப்பட்டனர். அவர்களோடு கலந்துரையாடல் நடத்தினார் மன்னர் அலெக்சாண்டர்.

அப்போது கிரேக்க நாகரிகத்தையும் கலாசாரப் பெருமைகளையும் அவர்களுக்கு விரிவாக எடுத்துச் சொன்னார்.

அவற்றைப் பின்பற்ற வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். அத்தோடு பாரசீகக் கலாசாரத்தையும் அவர்களிடம் இருந்து தெரிந்து கொள்ள விரும்பினார். பல்வேறு தகவல்களை அவர்களிடம் இருந்து அலெக்சாண்டர் தெரிந்து கொண்டார்.

சிறிது ஓய்வுக்குப் பிறகு மீண்டும் போர்க்களம் புகுந்தது மாசிடோனியப் படை.

(தொடரும்)

நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.

– *திருக்குறள்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கடலோடு கலக்கின்ற மழைநீரை நிலத்திடை தங்க வைத்தால்...

ஒரு சொட்டு மழை நீரும் கடலுடன் கலந்து விடக்கூடாது என்று கூறியவர் பராக்கிரமபாகு மன்னன்.

மன்னன் பராக்கிரமபாகுவின் வாக்கு அவரோடு அஸ்தமனமாகிப் போனதுதான் துரதிர்ஷ்டம்.

இப்போது மன்னன் பராக்கிரமபாகு உயிரோடு இருந்தால், மழை வெள்ளம் காட்டாறாக ஓடிச் சென்று கடலில் கலப்பது கண்டு இதயம் நொந்து இறந்திருப்பார்.

அந்தளவுக்கு வான்பொழிந்த அமிழ்தமான மழை நீர், நிலத்தில் தங்கி நிற்க இடமின்றி வாய்க்கால் வழி ஓடிக் கடலோடு சங்கமித்துப் போகிறது.

இதற்கு என்ன காரணம் என்று கேட்டால், இந்த நாட்டில் மன்னர் காலத்தில் அமையப்பெற்ற குளங்களுக்குப் பிற்பாடு புதிய குளங்கள் அமைக்கப்படவில்லை.

மாறாக ஏலவே அமையப்பெற்ற குளங்கள் முழுமையாகப் புனருத்தாரணம் செய்யப்படவும் இல்லை.

இதுதவிர, ஊர்கள் தோறும் இருந்த குளங்கள் தூர்ந்தும் நிரவியும் மேடாகிப் போக, மழை நீர் பாய்ந்தோடிக் கடலோடு கலந்து விடுகிறது.

நிலத்தடி நீர் குறைந்து போகிறது என்று கோசம் வைப்பவர்கள் மழை வெள்ளத்தை நிலத்தில் தேக்கி வைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தாதவர்களாக உள்ளனர்.

இப்போதெல்லாம் வானம் கொட்டித் தள்ளியது. எங்கும் பெரு வெள்ளம். என்ன செய்வது வான் கதவு திறக்கப்பட்டு மழை நீர் கடலோடு விடப்பட்டது.

அதிகளவான மழை பெய்தால் இதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும் என்ற கேள்வி எழுகின்றபோதுதான்,

இரணைமடுக்குளத்துக்கு இணையாக இன்னொரு குளத்தை நிர்மாணம் செய்ய முடியாதா? என்ற மறுப்பு வினா முன்னெழுகிறது.

இதற்கு மேலாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் கடலோடு கலந்த மழை வெள்ளத்தை தடுத்து அதனை நிலத்திடை தங்க வைத்தால் நிலம் குளிர்மையடையும்.

கிணறுகள் நன்னீராகும். மரங்கள் செழிக்கும், நிலங்கள் குளிர்மையாகும். பசுமைப் புரட்சி ஏற்பட இஃது வழி வகுக்கும்.

ஆகையால் தேவை கருதி ஏற்ற இடங்களில் புதிய குளங்களை நிர்மாணிப்பது பற்றிச் சிந்திப்பது அவசியம்.

இவ்வாறு புதிய குளங்களை அமைத்து மழை தரும் பெரு வெள்ளத்தைத் தேக்கி வைத்தால்;

குடிநீர்ப் பிரச்சினைகள் தீரும். வானம் பார்த்த பூமியில் பயிர் விளையும். செல்வம் கொழிக்கும். மக்களும் நாடும் சுபீட்சமாக வாழும். இது சத்திய வாக்கு.

### தற்போது பரவும் வைரஸ்

## பிரித்தானியாவில் பரவும் வைரஸுக்கு ஒப்பானது

### பொதுச் சுகாதார அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தற்போது பரவும்வைரஸ் பிரித்தானியாவில் பரவும் வைரஸ் இற்கு ஒப்பானது என பொதுச் சுகாதார அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று மிக மோசமாக பரவிக்கொண்டுள்ள நிலையில் அரசாங்கம் நாட்டினை திறக்கும் நடவடிக்கைகள் ஆரோக்கியமானதல்ல எனவும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டின் நிலைமைகள் குறித்து ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும்போதே பொதுச் சுகாதார அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டில் சகல பகுதிகளிலும் கொரோனா வைரஸ் தொற்றுநோய் உள்ளது. இப்போது நாட்டில் அதிகளவான வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர் என்றால் நாட்டில் வைரஸ் பரவல் அதிகம் என்பதே அதன் அர்த்தமாகும்.

பிரித்தானியாவில் காணப்படும் மாறுபட்ட வைரஸ் பரவல் ஆசியா உள்ளிட்ட 20 நாடுகளில் தற்போது பரவியுள்ளது. அவ்வாறு இருக்கையில் இலங்கையிலும் இப்போது பரவும் வைரஸ் வழமையாக இதுவரை காலமாக இலங்கையில் காணப்பட்ட வைரஸ் அல்லாது பிரித்தானியாவில் காணப்படும் வைரஸ் இற்கு ஒத்த ஒன்றாகவே காணப்படுகின்றது.

எனவே அரசாங்கம் இப்போது எடுக்கும் தீர்மானங்களில் எமக்கு உடன்பாடுகள் இல்லை. இப்போது நாம் தவறிழைப்பது மீண்டும் நாட்டினை முழுமையாக முடக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படும்" எனவும் அவர் கூறினார். (ஞா)

### கொரோனா தொற்றுக்குள்ளான

## கைதி தப்பியோட்டம்

(பொலனறுவை)

பொலனறுவை - வெலிகந்த கொரோனா சிறப்பு சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்றுவந்த தொற்றுறுதியான கைதி ஒருவர் நேற்று மாலை தப்பிச் சென்றுள்ளார்.

நீர்கொழும்பு சிறைச்சாலையிலிருந்து கோவிட்-19 தொற்றுக்குள்ளாகி கடந்த 07ஆம் திகதி சிகிச்சைக்காக இச் சிகிச்சை மத்திய நிலையத்தில் அனுமதிக்கப்பட்ட சிறைக்கைதி ஒருவரே இவ்வாறு தப்பியோடியுள்ளார். (ஞா)

## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல்5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** பெரியபொக்கணை, வாதரவத்தை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** மகாகச்சக்கொடிய கிராமம், பண்டாரிக்குளம் கிராமம், இராஜேந்திரகுளம் கிராமம், ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** உயிலங்குளத்திலிருந்து சிறுநாவற்குளம் வரை, கமலாம்பிகை அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்

## கொழும்பில் இருந்து வந்தவர் நெல்லியடியில் தனிமைப்படுத்தலில்

(கரணவாய்)

கொழும்பில் இருந்து வந்தவர் நெல்லியடியில் தனிமைப்படுத்திவைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து வருகை தந்த ஒருவரை கரவெட்டி சுகாதார பணிமனையினர் தனிமைப்படுத்தி வைத்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று கரவெட்டி சுகாதார பணிமனைக்குட்பட்ட பிரிவில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பு பௌத்தலோவா மாவட்டத்தில்வளிமண்டலவியல்த் திணைக்களத்தில் பணிபுரியும் சாரதிக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து அவருடன் நேரடித் தொடர்பு கொண்ட வளிமண்டலவியல் அதிகாரி ஒருவர் நெல்லியடிப் பகுதியில்தனிமைப்படுத்திவைக்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் இருந்து அனுராதபுரம் பகுதியில் உள்ள செயலமர்விற்கு 6 பேர் கொண்ட குழு தனிப்பட்ட வாகனத்தில் வருகை தந்து 3 நாட்கள் தங்கி இருந்துள்ளனர்.

இவர்கள் பயணித்த வாகன சாரதிக்கு தற்போது கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதனால் நேரடித் தொடர்பு கொண்ட இவர் நெல்லியடி பகுதிக்கு வருகை தந்ததையடுத்து இவர் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளார். (ஞா-60)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## திருத்தமும் வருத்தமும்



பிறரிடம் உள்ள குறைகளுக்கு முழுக்க முழுக்க அவர்களே தான் காரணம் என்றாலும் கூட, அந்தக் குறைதான் நம் சினத்திற்கும் காரணம் என்றாலும் கூட, சினத்தினால் அவர்களை இதுவரை எவ்வளவு திருத்தியிருக்கிறோம் என்று பார்த்தால் ஓர் அங்குலம் கூட இருக்காது. அல்லது ஒரு வேளை அவர்கள் நமக்குப் பயந்து கொண்டிருக்கலாம். ஆனால், திருந்தி இருக்க மாட்டார்கள்.

"நானும் முதலில் கோபம் கொண்டதில்லை. தவறு செய்யும் பொது நல்லவிதமாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆனால், அந்த முறை சரிப்பட்டு வரவில்லையே! இனி, கோபமும் கூடாதென்றால் அவர்களை எப்படித் தான் திருத்துவது?" என்று ஒருவர் கேட்பதாக வைத்துக் கொள்வோம். அவருக்குச் சொல்வதெல்லாம் சினத்தினால் திருத்தம் வரவே வராது. சினத்தினால் ஏதாவது வரும் என்றால் அது வருத்தமாகத் தான் இருக்கும். மாறாக, அன்பாய் முறையோடு பலமுறை கனிவாகக் கூறினோம் என்றால் அவர்கள் திருந்தவும் வழியிருக்கிறது.

முக்கியமாக, அவர்கள் மனம் புண்படும்படியாகக் கூறக்கூடாது. தவறு செய்யப்பட்ட கையோடு புத்தி சொல்லக் கூடாது. குத்திக் காட்டுவது போல் அறிவுரை இருக்கக் கூடாது. "அப்படிச் செய்ததை இப்படிச் செய்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும் இனிமேல் இந்தக் காரியத்தை இந்த விதமாகவே செய்து நன்மை அனுபவிப்போம்" என்ற விதமாகத் தான் அறிவுரை இருக்க வேண்டும். கூடவே, உங்கள் தவங்களில் அவர்கள் திருத்தத்திற்கான வாழ்த்தையும், சங்கற்பத்தையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

இந்த முறையில் சிறிது கால நீடிப்பு ஏற்பட்டாலும் நிச்சயமாக வெற்றி கிடைக்கும். பலர் ஏற்கனவே இம்முறையால் வெற்றி கண்டாயிற்று. எனவே, பிறரைத் திருத்துவது எப்படி என்பது இங்கு முக்கியமில்லை. நமது திருத்தந்தான் முக்கியம்

# புத்தாண்டுப் பலன்கள்

## 01.01.2021 முதல் 31.12.2021 வரை



### தொழில் வளம் சிறப்பாக அமையும்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**மீன இராசி வாசகர்களே!**

புத்தாண்டு தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு இலாப ஸ்தானத்தில், இராசிநாதன் குருவும் இலாப - விரயாதிபதி சனியும் இணைந்திருக்கின்றார்கள். எனவே சென்ற ஆண்டில் ஏற்பட்ட இன்னல்களும் இடர்பாடுகளும் விலகும். தொழிலில் எதிர்பார்த்தபடி இலாபம் கிடைக்கும். ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்போடு, வரும் மாற்றங்களை நல்ல மாற்றங்களாக வரவழைத்துக்கொள்வீர்கள். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

குருச்சந்திர யோகம் மற்றும் நீச்சபங்க இராஜயோகம் போன்ற யோகங்கள், இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஏற்படுகின்றது. உங்கள் இராசிநாதன் குரு நீச்சம் பெற்றாலும் சனியின் சேர்க்கையால் அவர் பங்கம் அடைகின்றார். எனவே எதிர்பாராத நல்ல திருப்பங்கள் வரப்போகின்றது. பொருளாதாரநிலை திருப்தி தரும். அருளாளர்களின் ஆலோசனைகள் அவ்வப்போது கைகொடுக்கும்.

**புத்தாண்டின் தொடக்க நிலை**

புத்தாண்டின் தொடக்கத்தில் உள்ள கிரக அமைப்பை உங்கள் சுய ஜாதகத்தில் உள்ள கிரக நிலைகளோடு ஒப்பிட்டுப் பார்த்துப் பலன்களை அறிந்துகொள்ளலாம். சுயஜாதகம் பலம் பெற்றிருந்தால் கோட்சார பலன்களினால் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது. இருப்பினும் நடைபெறும் திசாபுத்திக்கேற்ற தெய்வங்களைத் தேர்ந்தெடுத்து வழிபடும்போது நல்ல பலன்கள் இல்லம் தேடி வரும். ஆண்டின் தொடக்கத்தில் 2 ஆம் இடத்தில் செவ்வாய் பலம்பெற்றுச் சஞ்சரிக்கின்றார். 2 ஆம் இடம் என்பது தனம், வாக்கு, குடும்பம் ஆகியவற்றைக் குறிப்பதாகும். அங்கு ஆட்சி பெற்று விளங்கும் செவ்வாய் இருப்பதால், குடும்ப முன்னேற்றம் கூடும். அதிகார வர்க்கத்தினர்களின் ஆதரவோடு தொழில் வளத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

பாம்பு கிரகமான ராகு-கேதுக்களுக்கு நடுவில் உங்களுக்கு இராசி இருப்பதால் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை முறையாக செய்துகொள்வது நல்லது. வழக்குகளில் திடீர் திருப்பங்கள் ஏற்படும். அரசியல் துறையைச் சார்ந்தவர்களுக்கு ஆதரவு அதிகரிக்கும். கூடுதல் பொறுப்பும் பதவியும் தேடி வரும்.

9 இல் கேது இருப்பதால் தந்தைவழி உறவில் பிரச்சினைகள் உருவாகலாம். முன்னோர்கள் கட்டி வைத்த ஆலயத் திருப்பணிகளை முறையாக செய்ய முன்வருவீர்கள். தொழில் தொடங்கும் முயற்சியில் புதிய கூட்டாளிகள் வந்திணையலாம். பத்தாமிடத்தில் சூரியன் இருப்பதால் 'தொழிலை விரிவு செய்ய போதுமான தொகை இல்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, அரசு வழியில் ஒத்துழைப்பு கிடைக்கலாம். இலாப ஸ்தானத்தில் புதன், சனி, குரு ஆகிய மூன்று கிரகங்களும் இருக்கின்றன. இந்தக் கூட்டுக்கிரக யோகம் உங்களுக்குச் சாதகமாக அமைந்து வழிகாட்டும். குறிப்பாக மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். சென்ற ஆண்டில் முடங்கிப்போன தொழில் இப்பொழுது மீண்டும் தலைதூக்கும்.

**மகர குருவின் சஞ்சாரம்**

ஆண்டின் தொடக்கத்தில் மகர இராசியில் உங்கள் இராசிநாதன் குரு பகவான் சஞ்சரிக்கின்றார். அங்கு குரு நீச்சம் பெறுவதால் நன்மைகளும் கிடைக்கும். பொதுவாக கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் நீச்சம் பெறுவது யோகம்தான். இராசிநாதனாகவும் 10 இற்கு அதிபதியாகவும் விளங்கும் குரு, 11 ஆம் இடத்தில் வலிமை இழப்பதால் எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும். பிள்ளைகளை நெறிப்படுத்தி வல்லவர்களாக மாற்றும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். மாற்று மருத்துவத்தால் உடல்நலம் சீராகும். கூட்டு முயற்சியில் இருந்து தனித்து இயங்க முற்படுவீர்கள். வளைகாப்பு, நிச்சயதார்த்தம், திருமணம், சஷ்டியப்த பூர்த்தி என்று பல நல்ல நிகழ்வுகள் நடைபெறுவதற்காக செலவிடுவீர்கள்.

உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்திற்கு அதிபதியான குரு, 11 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, விட்டுப்போன ஒப்பந்தங்கள் மீண்டும் வரலாம். பணியாளர்களை மாற்றும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். ஆதாயம் தரும் தகவல் வெளிநாட்டில் இருந்து வரலாம். பாகப்பிரிவினைகளில் இருந்த தடை அகலும். தேகநலனில் அக்கறை காட்டுவது நல்லது. திடீர் பிரச்சினைகளால் சிலருக்கு கவலை அதிகரிக்கும். பணியாற்றும் இடத்தை விட சொந்த ஊரில் இடம் வாங்கி வீடுகட்ட வேண்டுமென்ற ஆசை நிறைவேறும். வாகனங்களில் செல்லும் பொழுது கவனம் தேவை. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளின் பழக்கம் ஏற்படும். தனியார் துறையிலிருந்து அரசு வேலைக்கு மாறிக்கொள்ள முயற்சி எடுத்தவர்களுக்கு, இப்பொழுது நல்ல நேரம் வந்துவிட்டது. தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும்.




**குருவின் பார்வை பலன்கள்**

புத்தாண்டில் இலாப ஸ்தானமான மகரத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை, உங்கள் இராசிக்கு 3, 5, 7 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே அந்த இடங்கள் புனிதமடைந்து நல்ல பலன்களை அள்ளி வழங்கும். குறிப்பாக இல்லத்தில் மகிழ்ச்சி கூடும். சொல்லை செயலாக்கிக் காட்டுவீர்கள். துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். கொடுத்த கடன்கள் வசூலாகும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பிள்ளைகளை நெறிப்படுத்தும் முயற்சிகளில் புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த தகராறுகள் அகலும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடிந்தது என்று பலரிடம் சொல்லி மகிழ்வீர்கள். தேக நலனும் சீராகும். செல்வ நிலையும் உயரும். வெளிநாட்டில் இருந்து நீங்கள் எதிர்பார்த்த தகவல் அனுகூலமானதாக இருக்கும். 'வந்த பணம் அனைத்தும் வட்டி கட்டியே செலவாகிவிட்டதே. இனியேனும் சேமிக்க முடியுமா?' என்று நினைத்தவர்களுக்கு, நல்ல வாய்ப்புகள் வந்து சேரும். எனவே கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள்.

கும்ப குருவின் சஞ்சார காலத்தில் குருவின் பார்வை, உங்கள் இராசிக்கு 4, 6, 8 ஆகிய இடத்தில் பதிவாகின்றது. எனவே அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைந்து உங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும். குறிப்பாகத் தாய்வழி ஆதரவு கிடைக்கும். தன்னிச்சையாக இயங்க முன்வருவீர்கள். 'பழைய வாகனங்கள் அடிக்கடி பழுதாகி செலவு வைக்கின்றதே.. அதைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்கள் வாங்கலாமா?' என்று சிந்தித்தவர்களுக்கு, அதற்கான சூழல் உருவாகும். இழப்புகளை ஈடுசெய்யப் புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும்.

**குருவின் வக்கிர காலம்**

16.06.2021 முதல் 13.09.2021 வரை, கும்ப இராசியில் குரு வக்கிரம் பெறுகின்றார். அது அவ்வளவு நல்லதல்ல. தொழில் ஸ்தானாதிபதியாகவும், இராசிநாதனாகவும் விளங்கும் குருபகவான் விரய ஸ்தானத்தில் வரும்பொழுது, தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். தொல்லை தரும் எதிரிகளின் பலம் கூடும். விரயங்கள் அதிகரிக்கும்.

சங்கிலித் தொடர்போல கடன்சுமை வரலாம். நம்பிக்கைக்குரிய நண்பர்களைப் பார்க்க இயலாது. நடக்கும் செயல்கள் அனைத்தும் நன்மைக்கே என்று நினைத்து அமைதி காண வேண்டிய நேரம் இது. நிச்சயித்த காரியங்களில் மாற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் இனிமை தராத இடமாற்றங்கள் வரலாம். உறவினர் பகை அதிகரிக்கும்.

14.09.2021 முதல் 13.10.2021 வரை, மகர இராசியில் குரு வக்கிரம் பெறுகின்றார். இக்காலத்தில் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களின் ஆதரவு குறையும். சகோதரர்கள் பிரச்சினைகளுக்கு அடித்தளமிடுவர். குடும்ப இரகசியங்களை வெளியில் சொல்லாதிருப்பது நல்லது.

பிள்ளைகளால் சில பிரச்சினைகள் வந்து அகலும். வாகனங்களில் செல்லும் பொழுது கவனம் தேவை. வெளிநாட்டு முயற்சிகளில் விழிப்புணர்ச்சி தேவை. உங்களோடு தோள் கொடுத்து உதவிய பணியாளர்கள் விலக நேரிடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊர் மாற்றங்கள் உருவாகி மனக்கலக்கத்தை ஏற்படுத்தும்.

**சனியின் வக்கிர காலம்**

12.05.2021 முதல் 26.09.2021 வரை, மகரத்தில் சனி வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 11, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அதாவது இலாப ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதி. விரயாதிபதியாக விளங்குபவர் வக்கிரம் பெறுவது நன்மை தான். ஆனால் லாபாதிபதியாகவும் அவர் விளங்குவதால் சனி வக்கிரம் பெறும் பொழுது பணத்தட்டுப்பாடு அதிகரிக்கும். உறவினர்கள் பகை உருவாகும். அரசு வழிப் பிரச்சினைகளும் ஏற்படும். 'வங்கி சேமிப்பு கரைகிறதே' என்று 'கவலைப்படுவீர்கள். வீடு மாற்றச் சிந்தனைகளும் ஊர் மாற்றச் சிந்தனைகளும் உருவாகும். 'கொடுத்த பணம் வசூலாகவில்லையே' என்று கவலைப்படுவீர்கள்.

**கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்**

14.04.2021 முதல் 03.06.2021 வரை, மற்றும் 04.06.2021 முதல் 21.07.2021 வரை செவ்வாய்-சனி பார்வை காலமாகும். இக்காலத்தில் எதையும் யோசித்துச் செய்வது நல்லது. உறவினர்களுக்கு நீங்கள் நன்மை செய்தாலும் அது தீமையாகவே தெரியும். குடும்பத்தில் நிம்மதி குறையலாம். கொடுக்கல் - வாங்கல்களில் ஏமாற்றம் உண்டு. பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு வீண் பழிகள் ஏற்படும். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு பெரும் தொகை செலவு செய்வீர்கள்.

வருமானப் பற்றாக்குறை அதிகரிக்கும். கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயற்படுங்கள். சொத்துக்களால் பிரச்சினைகள் வரலாம். சொந்தங்களின் அரவணைப்பு குறையும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சலுகைகள் மறுக்கப்படலாம். சக ஊழியர்களால் தொல்லை உருவாகலாம்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

இந்தப் புத்தாண்டில் எல்லா நாட்களும் குரு பகவானை வழிபடுவது நல்லது. இல்லத்தில் தென்முகக்கடவுள் படம் வைத்து, குரு கவசம் பாடி வழிபட்டால், நல்ல தகவல்கள் வந்து சேரும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தப் புத்தாண்டு உங்களுக்கு சிறப்பான ஆண்டாக அமையும். பணப்புழக்கம் அதிகரிக்கும். வீடு வாங்கும் முயற்சி வெற்றி தரும். கணவன்-மனைவிக்குள் அன்பும், பாசமும் அதிகரிக்கும்.

ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. உறவினர்களின் மனக்கசப்பு மாறும். தாய்வழி ஆதரவு திருப்தி தரும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பிள்ளைகள் வழியில் பெருமையான தகவல் வரலாம். பணிபுரியும் பெண் களுக்கு ஊதிய உயர்வும் உத்தியோக உயர்வும் உண்டு. வேலையில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு, பழைய இடத்திலேயே பணிபுரிய அழைப்புகள் வரலாம். சனி-செவ்வாய் பார்வை காலத்தில் மிகுந்த கவனம் தேவை. (முற்றும்)

## ஏப்ரலில்...

ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் ஏப்ரலில் வெளியிடப்படவுள்ளதாக கல்வியமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மல்வத்து அஸ்கிரிய தேரரை நேற்று ஞாயிற்றுக்கிழமை சந்தித்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், உயர்தரப் பெறுபேறுகளின் அடிப்படையில், பல்கலைக்கழகத்திற்கு தகுதிபெறும் மாணவர்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் பல்கலைக் கழகங்களுக்கான அனுமதியைப் பெறுவரெனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் மார்ச்சில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் இதற்கான பெறுபேறுகளை ஜூனில் வெளியிட நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாக ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## துப்பாக்கிச்...

துள்ளார்.

வவுனியா, ஓமந்தை அரசமுறிப்புப் பகுதியில் கணவன் மனைவிக்கு இடையில் இடம்பெற்ற மோதலின்போது அங்கு வந்த மனைவியின் உறவினர் ஒருவரால் கணவன் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் அவர் படுகாயமடைந்திருந்தார்.

குறித்த சம்பவத்தில் படுகாயமடைந்திருந்த 29 வயதான தேவராசா ஜெயசுதன் என்பவர் வவுனியா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

எனினும் ஒரு வாரம் கழித்து நேற்றைய தினம் அவர் மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஞா-250,299)

## 3 பிள்ளைகளின்...

மீட்கப்பட்டிருந்த பெண் 3 பிள்ளைகளின் தாய் எனத் தெரியவந்துள்ளதுடன், குறித்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தில் கணவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பூநகரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தெளிகரை பகுதியில் குடும்ப பெண் ஒருவர் நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

தெளிகரையில் அமைந்துள்ள அவரது வீட்டில் வைத்து குறித்த பெண் கொலை செய்யப்பட்டுள்ளதாக பூநகரி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வயிற்றுப் பகுதியில் வெட்டு காயங்களுடன் மீட்கப்பட்டிருந்த பெண்ணின் சடலம் 37 வயதுடைய ரூபஸ் கிருஸ்ணகுமாரி என்ற 3 பிள்ளைகளின் தாயினுடையது என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை சம்பவ இடத்திலிருந்து கூரிய ஆயுதமும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பூநகரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஞா-100,312)

## முரசுமோட்டை...

பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11.45 மணியளவில் பரந்தன் பகுதியிலிருந்து சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது எதிரே வந்த டிப்பர் வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியது.

மோட்டார் சைக்கிலில் பயணித்த தருமபுரம் பகுதியைச் சேர்ந்த ஞானசேகரம் நிதுசன் என்ற 20 வயதுடைய இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஞா-315,316)

## காணி சுவீகரிப்பு...

முகாம் அமைப்பதற்காக காணி சுவீகரிப்பு செய்வதை முறியடிக்க அனைவரும் ஒன்றுதிரண்டு போராட வேண்டும் என முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கோரிக்கை விடுத்துள்ளார்.

முப்படையினரின் தேவைகளுக்காக தொடர்ச்சியாக எமது மக்களின் சொந்தக் காணிகள் சுவீகரிக்கப்படுகின்ற நிலைமை நீடிக்கின்றது.

கடந்த காலங்களிலும் மக்களின் காணிகள் சுவீகரிப்பதற்காக அளவீடு செய்ய முற்பட்டபோது மக்களின் எதிர்ப்பினால் அந்த நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தன.

எனினும் அதன் தொடர்ச்சியாக மண்டைதீவு மற்றும் மண்கும்பான் பகுதிகளில் மக்களுடைய காணிகள் கடற்படையின் முகாம் அமைப்பதற்கு சுவீகரிப்பு செய்வதற்காக அளவீடு செய்யப்படவுள்ளது.

இன்று திங்கட்கிழமை மண்டைதீவிலும் நாளை செவ்வாய்க்கிழமை மண்கும்பானிலும் அளவீட்டு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

எனவே எமது மக்களின் காணி சுவீகரிப்பு நடவடிக்கைக்கு எதிராக இன்று காலை 8.30 மணிக்கு மண்டைதீவிலும் நாளை காலை 8.30 மணிக்கு மண்கும்பானிலும் பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் அணிதிரண்டு காணி சுவீகரிப்பைத் தடுத்து நிறுத்த வேண்டும் என முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் அழைப்பு விடுத்துள்ளார். (ஞா-18,33)

## 8 பேருக்கு...

தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 8 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

இதன்படி மன்னார் மாவட்டத்தில் 3 பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் 3 பேருக்கும் கிளிநொச்சி மற்றும் பூநகரியில் இருவருக்குமாக 8 பேருக்கே இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா-18,299,316)

## 8 பேர் பலி...

இலங்கையில் மேலும் 8 பேர் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து நாட்டின் கொரோனா மரண எண்ணிக்கை 264 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை நேற்று மாத்திரம் இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 749 என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து நாட்டில் மொத்த கொரோனாத் தொற்றாளிகளின் எண்ணிக்கை 53 ஆயிரத்து 62ஆக உயர்ந்துள்ளது. (ஞா)

## வைத்தியர்...

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பகுதியில் வைத்தியர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் புதுக்குடியிருப்பு, 4ஆம் வட்டாரம், கோம்பாவில் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

செல்வராஜா ராஜகரன் (வயது - 36) என்ற வைத்தியரே தனது சொந்த வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஞா-350)

## போத...

2020ஆம்ஆண்டு கொரோனாவுடன் வருகை தந்தார் என்ற சர்ச்சைக்குள் அகப்பட்ட மத போதகர் நேற்று முன்தினம் சுவிஸ் நாட்டில் காலமானார்.

2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்து மீண்டும் 18ஆம்திகதி சுவிஸ் நாட்டுக்கு திரும்பிய மதபோதகர் சற்குணராஜாவுக்கு கொரோனாத் தொற்று இருந்தமை சுவிஸ் நாட்டில் கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் போதகருடன் பழகிய அடிப்படையில் தாவடியைச் சேர்ந்த ஒப்பந்தகாரர் ஒருவருக்கு காய்ச்சல் காணப்பட்டபோது 2020.03.21 அன்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதனால் தாவடிக் கிராமமே முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டபோது போதகர் பெயர் அதிகம் உச்சரிக்கப்பட்டது.

இவ்வாறு கடந்த ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் அதிகம் உச்சரிக்கப்பட்ட போதகர் தற்போது சுவிஸ் நாட்டில் சுகயீனம் காரணமாக உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஞா)

## முல்லை...

முல்லைத்தீவு மாவட்டத்தின் தொன்மையான கிராமங்களில் ஒன்றாகிய குருந்தூர் மலையில் புதிய கட்டுமாணம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சி முன்னெடுக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் சம்பவ இடத்திற்குச் சென்றுள்ளனர்.

நேற்று மாலை பாராளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், செல்வம் அடைக்கலநாதன், வினோநோதராதலிங்கம் ஆகியோரே குருந்தூர் மலைக்கு சென்றுள்ளனர்.

இருந்தபோதிலும் பொலிஸார் அங்கு செல்ல அவர்களுக்கு உடனடியாக அனுமதிக்கவில்லை என்ற போதிலும் நீண்ட இழுபறியின் பின்னரே அவர்கள் அங்கு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஞா)


வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1654 திகதி 2021.01.17
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 12 31 38 71
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 17/01/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0737
N 22 07 30 34 48

மஹஜன சம்பத
திகதி 2021/01/17
சீட்டிழுப்பு இலக்கம் 4370
K 1 5 8 3 5 1
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 17.01.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2665
J 06 30 39 48
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2021.01.17
சீட்டிழுப்பு இலக்கம் - 407
Q 21 29 33 38

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1166
சீட்டிழுப்பு திகதி: 17.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 99,384,305
வெற்றி இலக்கங்கள் 08 19 21 35 S
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
சீட்டிழுப்பு இல: 3496
சீட்டிழுப்பு திகதி: 17.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 40,850,324
வெற்றி இலக்கங்கள் 26 33 45 62 H
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 32,94,889/=
திகதி: 17.01.2021
வெற்றி வாரம்: 3047
வெற்றி இலக்கங்கள் 06 09 24 42 கும்பம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 83,52,920

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1340 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 17/01/2021 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் W 18 25 31 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் 63,723,947/=

B 04 18 66 71
678
17.01 2021
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 79,344,055
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**உதவி ஆசிரியர் தேவை (Female)**

ஆங்கில மொழியில் கற்றலை மேற் கொள்ளும் தனியார் முன்பள்ளிக்கு உதவி ஆசிரியர் தேவை. ஆங்கில மொழியில் கற்பித்தலை மேற்கொள் ளும் ஆசிரியருக்குக் கீழ் கடமைகளை செயற்படுத்தக்கூடியவராக இருக்க வேண்டும்.

ஆர்வமுள்ளவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தொடர்பு கொள்ளலாம் அல்லது மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்கலாம்.

Director,
154, Brown Road,Jaffna.
Tel.No: 077 244 4172
Email ID : aerolankajaf@gmail.com

(C-1179)

## சுகாதார கட்டுப்பாட்டை மீறியதால்

# பருத்தித்துறையில் திரையரங்கிற்கு சீல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் திரையரங்கு ஒன்று கோவிட் -19 சுகாதார கட்டுப் பாடுகளை மீறி இயங்கியதால் சுகா தாரத் துறையினரால் சீல் வைக்க ப்பட்டு மூடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியின் முன் அனுமதி பெறாது கோவிட் -19 சுகாதார கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்காது இயங்கிய திரை யரங்கே பருத்தித்துறை பொதுச் சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தலைமையிலான குழு வினரால் மூடப்பட்டுள்ளது. (ஞா -33,60)

அண்ணா EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/=
070 3305500
075 3305500
(C-1174)
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /- பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்
கணிதம் மற்றும் ICT
தரம் 06 முதல் 11 வரையான மாணவர்க ளுக்காக கணிதம் மற்றும் ICT பிரத்தி யேக மற்றும் குழு வகுப்புக்கள்
(Tamil & English Medium )
Maths and ICT Classes for From Grade 06 to Grade 11.
(C-1192)
RAJAMANOKARAN
077 918 5724
(Former Teacher Kingston College)

மீண்டும்
வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும்
100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.
(C-1185)
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(5309)


வேலை வாய்ப்பு
உலகளாவியரீதியில் முதல்தர காப்புறுதி நிறுவனமொன்றில் வேலை வாய்ப்பு வெற்றிடங்கள்.
- விற்பனை முகாமையாளர்
- நிதி ஆலோசகர்
மேலதிக தொடர்புகளுக்கு
(C-1190)
Call : 077 354 5351
Whatsapp / Viber : 074 021 0683

TVEC Approved Certificate
HIGH LOOKS
INTERNATIONAL ACADEMY FOR COSMETOLOGY
Approved centre by Tertiary & Vocational Education Commission
வழங்கப்படும் கற்கைநெறிகள்
கொழும்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி கிளைகளில்
IVQ Level -2
NVQ Level -3,Level -4, Level -5, Level -6

DIVINE LOTUS
அழகு நிலையம்
உயர் தொழில்நுட்ப சேவைகள் மாங்கையர்களுக்கான பயன் உள்ள சேவைகள், பயிற்சிகள்.
மணப்பெண் அலங்காரம், பேசியல், கேக் ஐசிங், தையல், ஆரிவேக்.
ஆர்வம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை, சலுகைகள் உண்டு.
(5310)
55, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
(யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு அருகில்)
021 222 4240, 077 601 8563
விபரங்களுக்கு நேரில் வரவும்.

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg
எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி
(C-1167)
0768226240 DHL

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 16 . 06 . 1953

மறைவு 30 . 01 . 2020

அமரர்

### பொன்னம்பலம் இரத்தினம் (குமார்)

( மெக்கானிக் )

அன்பு மொழி பேசி
ஆசைக் கதைகள் கூறி
இன்னா சொல்லாது
ஈவு இரக்கம் கொண்டு
உயர்ச்சி மேலோங்க
ஊக்கமென உழைத்த
எங்கள் குடும்ப ஆலவிருட்ஷம்
எமைவிட்டகன்று
ஆண்டொன்றானதுவோ !

உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-1188)

நீங்கா நினைவுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

### சற்குணபாலதேவி தணிகாசலம்

திதி - பஞ்சமி (18.01.2021)

நினைப்பதற்கென்றொரு
தினமில்லை - அம்மா
உங்களை மறப்பதற்கென்றொரு
கணமில்லை.
இருக்கின்றீர் எம்மிடை என்பதே
எண்ணமாய் வாழ்கிறோம்
அன்னையே...

தோற்றம் 01.01.1950

உதிர்வு 30.01.2020

(5313)

புது வீதி,
ஆறுகால் மடம்.

என்றும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.